



Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 88 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 07ஆம் திகதி திங்கட்கிழமை
(24.10.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 27 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## உஷ்



அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் நிறைவேறிய பின்னர் ராஜபக்ஷ குடும்பத்தினருக்குள் பெரும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாம்.

இது நிறைவேற சமல் ராஜபக்ஷ எம்.பி. ரணிலுக்கு ஆதரவை வழங்கியதால் சமல் மீது கடுப்பில் இருக்கிறாராம் பெசில்.

சஷீந்திர ராஜபக்ஷவை முன்னணிக்கு கொண்டுவர சமல் திரைமறைவில் காய்களை நகர்த்துவதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

# ரணில் தலைமையில் புதிய கூட்டணி!

### அன்னம் சின்னத்தில் உருவாகும் அரசியல் கூட்டமைப்பில் பெரமுன உறுப்பினர்கள் கூண்டோடு இணையத் தீர்மானம்

நமது விசேட செய்தியாளர்

ஐக்கிய தேசியக் கட்சியுடன் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் குழுவொன்று தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்தப் புதிய கூட்டணியை மக்களிடம் அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி கண்டி, கம்பஹா, காலி, பொலன்னறுவை, பதுளை, கேகாலை, மாத்தறை போன்ற மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரமுனவின் முக்கியஸ்தர்கள் குழுவொன்று...

02 பக்கம்

## மின்சார சபை மறுசீரமைப்பு விரைவில்!

மின்சார சபையை மறுசீரமைப்பு செய்வதற்கு தேவையான யோசனைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்...

02 பக்கம்



தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு புத்தாடைகளைக் கொள்வனவு செய்வதற்காக ஹட்டனில் நேற்று (23) பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். (படப்பிடிப்பு: க.கிஷாந்தன்)

## நாட்டைச் சூழ்ந்திருக்கும் இருள் நீங்க ஒன்றிணைவோம்

### தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



"நம் தாய்நாட்டை முன்னொருபோதும் இல்லாத விதத்தில் சூழ்ந்திருக்கும் இருளை விரட்டி, ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து செயற்பட வேண்டும்" - என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளில் பெய்துவரும் அடைமழை காரணமாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அதன்பிரகாரம் களுத்துறை, கேகாலை, காலி, நுவரெலியா,...

02 பக்கம்

## மூன்றாவது முறையாகவும் சீன ஜனாதிபதியாக ஜின்பிங்



சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சக்திவாய்ந்த மத்திய குழுவுக்கு ஜனாதிபதி லி ஜின்பிங் தெரிவுசெய்யப்பட்டதையடுத்து அந்நாட்டின் ஜனாதிபதியாக அவர் மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சீன வரலாற்றில் ஜனாதிபதி தொடர்ந்து ...

02 பக்கம்

## ஒளிமயமான நாட்டுக்காக தீபாவளியில் பிரார்த்திப்போம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து



தீமையை தோற்கடித்து நன்மை கிடைத்த நன்னாளான இன்றைய தீபாவளி தினத்தில், நாட்டில் தற்போதுள்ள ஆபத்தான சூழ்நிலையை தோற்கடித்து நாட்டைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோம் - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## மின் கட்டணம் உயரும் சாத்தியம்

02 பக்கம்

## இலங்கைக்கு கடத்தவிருந்த மஞ்சள் தமிழகத்தில் மீட்பு

### 200 ஜோடி செருப்புகளும் கைப்பற்றல்



தமிழகம், இராமநாதபுரம் மண்டபம் அருகே நாட்டுப் படகு மூலம் இலங்கைக்கு கடத்தவிருந்த 750 கிலோ மஞ்சள் மற்றும் 200 ஜோடி செருப்புகள் பறிமுதல் செய்யப்பட்டன.

02 பக்கம்

## அரசியலமைப்புப் பேரவை இரு வாரங்களில் நியனம்

### ஆணைக்குழுக்களும் புதிதாக தெரிவு

நா. தினுஷா

அரசியலமைப்புப் பேரவைக்கான உறுப்பினர்களை எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதிக்குள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அரசியலமைப்புப் பேரவைக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னரான...

02 பக்கம்

## மீண்டெழும் நம்பிக்கையுடன் தீபாவளியை கொண்டாடுங்கள்

### அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து



பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ள சூழலிலும் மீண்டெழும் நம்பிக்கையுடன் தீபாவளித் திருநாளை கொண்டாடும் அனைவருக்கும் அன்பு கலந்த வாழ்த்துகள் - என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...




## ஆட்சி முறைமையில் மாற்றம் தேவை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு இந்த ஆட்சி முறைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமென்றே மக்கள் கோரிக்கை விடுப்பதாகவும், அதற்கு மாறாக தன்னல விருப்பின்படி தனிப்பட்டவர்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்குவதல்ல எனவும்,புதிய முறையின் கீழ்,பொருளாதார, சமூக நீதி மற்றும் மனிதநேயத்தை முதன்மைப்படுத்தும் வேலைத்திட்டமே தேவை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

02 பக்கம்

## அரச இயந்திரத்தை முற்றாக மாற்றியமைப்பது அவசியம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நா. தினுஷா

வெளிநாட்டுக் கடன்களினால் எம்மால் அபிவிருத்தியடைய முடியாது. வரையறைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்து முதலீட்டாளர்களுக்காக தீர்மானங்களைப் பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகளை காலந்தாழ்த்தினால் முதலீடுகளை முறையாக பெற்றுக்கொள்ள முடியாது. எனவே, எதிர்வரும் ஒருசில மாதங்களில் அரச இயந்திரத்தை முற்றாக மாற்றியமைக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சூம் தொழில்நுட்பத்தினூடாக ...

02 பக்கம்

## பெண்களிடம் கைபேசிகளை யாழில் அபகரிக்கும் கும்பல்

### சந்தேக நபரொருவர் 09 தொலைபேசிகளுடன் கைது

யாழ். செய்தியாளர்

யாழ்ப்பாணத்தில் பஸ்களில் பயணிக்கும் இளம்பெண்களிடம் கைபேசிகளை அபகரிக்கும் கும்பலைச் சேர்ந்த ஒருவர் நேற்று (23) கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

02 பக்கம்

## அரசியலமைப்பு...

இரண்டு வார காலப்பகுதிக்குள் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் இருக்கும் சுயாதீனஆணைக்குழுக்களின் உத்தியோகப்பூர்வ காலம் 22ஆவது அரசியலமைப்பபு திருத்தம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து முடிவுக்கு வந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, தேசிய தேர்தலை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ்ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, தேசிய காணக்காய்வு ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு உள்ளிட்ட ஆணைக்குழுக்கள் 22ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பின்னர் மீள வலுப்படுத்த வேண்டிய நிறுவனங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## ரணில் ...

புதிய கூட்டணியில் இணையவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவில் ஏற்கனவே உத்தியோகபூர்வமற்ற முறையில் தேர்தல் தொகுதி அமைப்பாளர் பதவிகளை அவர்கள் பெற்றுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் இல்லத்தில் அண்மையில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்காலத்தில் எடுக்கவுள்ள அரசியல் நிலைப்பாடு தொடர்பில் மினுவாங்கொடை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிடம் இரகசிய கருத்துக் கணிப்பு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அரசியல் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் அமைச்சர் ரணதுங்க இந்தக் குழுவுடன் ஆலோசனை நடத்தியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

அன்னம் சின்னத்தில் உள்ள கட்சியொன்றை இந்த அரசியல் கூட்டணிக்குப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் சவாலை ஏற்றுக்கொண்ட தலைவரைத் தொடர்வது பொருத்தமானதா அல்லது இதுவரை இருந்த அரசியல் நிலைப்பாட்டில் பணியாற்றுவது பொருத்தமானதா என்று அங்கு அரசியல் பீட உறுப்பினர்களிடம் வினவப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளராகவும் உள்ளார். அவர் தற்போது தனிப்பட்ட பயணமாக பிரான்ஸ் சென்றுள்ளார்.

## பெண்களிடம் ...

இந்த சந்தேக நபரிடமிருந்து 9 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர். சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி, நீர்வேலி, சுன்னாகம், பலாலி உள்ளிட்ட இடங்களில் பேருந்துகளில் பயணிக்கும் இளம் பெண்களிடம் கைபேசிகளை சந்தேக நபர் அபகரித்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்சிஸின் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கையடக்கத் தொலைபேசிகளை தவறவிட்டு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை வழங்கியவர்கள் கைபேசியை அடையாளம் காட்டுமாறு மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நாட்டைச் சூழ்ந்திருக்கும்...

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வண்ண மயமான கலாசார நிகழ்வான தீபாவளி நன்னாளில் வாழ்த்து தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அஞ்ஞானம் நீங்கி, மெய்ஞானம் பிறக்க வேண்டும் என்பதற்காக இந்துக்கள் இந்நன்னாளில் தங்களின் இல்லங்கள், கோயில்கள் என அனைத்து இடங்களிலும் தீபம் ஏற்றி, தீபத்திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

ஒளியால் மட்டுமே இருளை நீக்க முடியும். அதேபோல நம் தாய் நாட்டை முன்னொருபோதும் இல்லாத விதத்தில் சூழ்ந்திருக்கும் இருளை விரட்டி, ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து செயற்பட வேண்டும். சுபீட்சமான ஒரு நாட்டிற்கு சமாதானம், ஒற்றுமை, சகோதரத்துவம் என்பன மிகவும் முக்கியமானவை. இனம், மதம், கட்சி, நிறம் என்ற பிரிவினையின்றி, நம்வாழ்விலும், நாட்டிலும் சூழ்ந்திருக்கும் இருளை நீக்க வேண்டும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு அனைவரும் கைகோர்த்துக் கொள்ள வேண்டும் என்று இத்தீபத் திருநாளில் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

இம்முறை தீபாவளிப் பண்டிகையானது அனைவரது அபிலாஷைகளையும் பூர்த்தி செய்து, இலங்கையை சௌபாக்கியம் நிறைந்த நாடாக உருவாக்கும் சிறந்த எதிர்காலத்தின் தொடக்கமாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கிறேன். தீபத்திருநாளைக் கொண்டாடும் உங்கள் அனைவருக்கும் எனது தீபாவளி நல்வாழ்த்துகள் எனத் தெரிவித்துள்ளார்.

## ஒளிமயமான நாட்டுக்காக...

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வாழ்க்கையின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுக்கும் பண்டிகையாக தீபாவளிப் பண்டிகை உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படுகிறது.

இந்துக்கள் இத்தினத்தில் எண்ணெய் வைத்து, நீராடி, புத்தாடை அணிந்து, ஆலய தரிசனம் செய்வதுடன், ஆலயங்கள் மற்றும் வீடுகளில் தீபங்கள் ஏற்றி வழிபடுவார்கள். அத்துடன் பெரியோர்களை வணங்கி, பரிசுப் பொருட்கள் பரிமாறி, பட்டாசு கொளுத்தி, உறவினர்களுடன் இனிப்பான சிற்றுண்டிகள் உண்டு, உலகெங்கும் உள்ள இந்துக்கள் தீபாவளிப் பண்டிகையைக் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

தீமையைத் தோற்கடித்து நன்மை கிடைத்த நன்னாளான இன்றைய தீபாவளி தினத்தில், நாட்டில் தற்போதுள்ள ஆபத்தான சூழ்நிலைமையை தோற்கடித்து நாட்டை கட்டியெழுப்ப நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோம்.

தீபாவளிப் பண்டிகையை உலகிற்கு இருளை அகற்றி வெளிச்சம் தரும் பண்டிகையாகவும், அறியாமையை நீக்கி ஞானத்தை அளிக்கும் பண்டிகையாகவும் இந்து மக்கள் கொண்டாடுகின்றனர்.

புராதன இதிகாசங்களில் குறிப்பிடப்பட்ட சமூக நல்லிணக்கம்,குடும்ப உறவுகளின் முக்கியத்துவம் மற்றும் புரிந்துணர்வு ஆகியவற்றின் ஒருமித்த நாளாக தீபாவளி தினம் கொண்டாடப்படுகிறது. மேலும் இலங்கை மக்களிடையே நல்லிணக்கத்தையும்,பரஸ்பர புரிந்துணர்வையும் உருவாக்க இந்த அற்புதமான நன்னாள் பெரும் பங்களிப்பை வழங்குகிறது.

அனைவரினதும் வெறுப்பும் கோபமும் நீங்கி,மனித நல்லிணக்கம் நிறைந்த இலங்கையில் சுதந்திரமாகவும், நல்லிணக்கத்துடனும், சமாதானத்துடனும் வாழ தீபத்திருநாள் அனைவருக்கும் உறுதுணையாக அமையட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரிச்சட்டமூலம் தொடர்பில் மனுத்தாக்கல் செய்யலாம்

திருத்தப்பட்ட வரிச்சட்டமூலம் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் உயர் நீதிமன்றத்துக்குச் சென்று மனுத்தாக்கல் செய்ய முடியுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் வெள்ளிக்கிழமையின் பின்னர் உயர் நீதிமன்றத்தின் முடிவை அறிவிக்க 21 நாட்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர், 2019ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் நீக்கப்பட்ட வரிகளை மீண்டும் சேர்க்கவும் மேலும் சில வரிகளை புதிதாக சேர்த்துக்கொள்ளவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ருவான்வெல்லை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தின் அனுமதிக்கமையவே வருமான வரியை அறவிடத் தீர்மானித்துள்ளோம்.

நாடாளுமன்ற நிதி பற்றிய குழுவில் அனுமதி பெற்று சபாநாயகரினால் கையொப்பமிட்டதன் பின்னரே நடைமுறையில் எதிர்பார்த்துள்ள வருமான வரி செயற்பாடுகளில் தனிநபர் வரி செலுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மின் கட்டணம்...

மின்சாரக் கட்டணத்தை மீண்டும் 30 வீதம் அதிகரிக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளதாக உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 290 கோடி ரூபா கடன் தொகை தொடர்பில் டிசம்பர் மாதம் இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என அந்த பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், இது தொடர்பாக அரசு இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. இருப்பினும், நாணய நிதியம் தனது நிலைப்பாட்டை மத்திய வங்கி அதிகாரிகளுக்கு எழுத்துபூர்வமாகத் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை கடந்த ஓகஸ்ட் மாதம் மின் கட்டணத்தை உயர்த்தியது. இதனால் மின்சார சபையின் ஆண்டு கூடுதல் வருமானம் ஆயிரத்து 500 கோடி ரூபாவாக உயர்ந்தது.

## ஐந்து மாவட்டங்களுக்கு...

இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் தொடங்கொடை, இங்கிரிய, வலல்லாவிட்ட, பாலிந்தநுவர, புளத்சிங்கள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், காலி மாவட்டத்தின் பத்தேகம, கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, தெரணியகல, எட்டியாந்தோட்டை, புளத்கொஹுபிட்டிய, வரக்காபொல, மாவனெல்ல ஆகிய பகுதிகளும் அபாயப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட, நிவித்திகல, இரத்தினபுரி, எஹலியகொட, கலவான ஆகிய பகுதிகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மூன்றாவது...

மூன்றாவது முறையாக பதவி நீடிப்பு பெறவிருப்பது இதுவே முதன்முறையாகும்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது கூட்டம் தலைநகர் பெய்ஜிங்கில் கடந்த வாரம் தொடங்கியது.

ஸி ஜின்பிங் மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக தொடர்வதற்கு இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்படும் என்று அப்போதே எதிர்பார்க்கப்பட்டது.

ஸி ஜின்பிங்கின் 10 ஆண்டு பதவிக் காலம் நிறைவுபெறும் நிலையில், மூன்றாவது முறையாக அவரது பதவிக் காலம் மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்படுவதற்கு வழிவகை செய்யும் வகையில், கம்யூனிஸ்ட் கட்சியின் சக்திவாய்ந்த மத்தியக் குழுவுக்கு அவர் நேற்று முன்தினம் (22) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## இலங்கைக்கு...

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே உள்ள வேதாளை பகுதியில் இருந்து இலங்கைக்கு சில பொருட்கள் கடத்தப்பட உள்ளதாக இராமேஸ்வரம் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

அதனடிப்படையில் வேதாளை கடற்கரை பகுதிக்கு விரைந்து சென்று சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்தப் பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நின்ற ஒரு படகை சோதனை செய்தனர்.

அந்தப் படகில் 22 மூடைகளில் இருந்த 750 கிலோ மஞ்சள் மற்றும் இரண்டு சாக்கு மூடைகளில் இருந்த 200 ஜோடி செருப்புகள், 4 கேன்களில் இருந்த பெற்றோல் மற்றும் டீசல் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தப் படகு யாருக்கு சொந்தமானது என்பது குறித்து பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அரச இயந்திரத்தை...

நேற்று முன்தினம் (22) 'யூத் இன் கவனன்ஸ்' என்ற தலைப்பில் இடம்பெற்ற மாநாடொன்றின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்தியடைந்த ஒவ்வொரு நாடும் வெளிநாட்டு முதலீடுகளினாலேயே அபிவிருத்தியடைந்துள்ளது. கடன்களால் அந்த நாடுகள் அபிவிருத்தியடைவில்லை. எனவே, வெளிநாட்டு மூலதனமின்றி எம்மால் அபிவிருத்தியை நோக்கி பயணிக்க முடியாது. வெளிநாட்டு மூலனங்களினால் இலங்கையில் புதிய வர்த்தகங்கள் உருவாக்கப்படவேண்டும். நாட்டில் உற்பத்திகள் அதிகரிக்கப்பட வேண்டும். அதன் மூலமே முன்நோக்கிப் பயணிக்க முடியும்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் வெள்நாட்டுக் கடன்களினூடாக அபிவிருத்தியடைய முயற்சித்தோம். 2015ஆம் ஆண்டாகும்போது அந்த முயற்சி பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது.

இப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்பொன்றும் எனக்கு கிடைத்தது. அந்த வாய்ப்பை பயன்படுத்துவதற்கான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதன் காரணமாகவே, இன்று இக்கட்டானவொரு நிலையில் இருக்கிறோம்.

வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்துக்கொள்ள வேண்டுமெனில் அதற்கான சூழலை நாட்டில் உருவாக்க வேண்டும். வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்கான பணிகளையே தற்போது முன்னெடுத்து வருகிறோம்.

வரையறைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்து முதலீடு செய்ய முன்வருபவர்களுக்கு தீர்மானங்களை பெற்றுக்கொடுக்க இரண்டு வருடங்கள் வரை காலம் கடத்தினால் முதலீடுகளை முறையாக பெற்றுக்கொள்ள முடியாது. எனவே, எதிர்வரும் ஒருசில மாதங்களில் இந்த அரச இயந்திரத்தை முற்றாக மாற்றியமைக்க வேண்டும்.

எமது நாட்டுக்கு தேவையான மசகு எண்ணெயை மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிறோம். அதில் மாற்றம் ஏற்படாது. இன்று, ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையின் காரணமாக, கடன் வசதிகளை பெற்றுக்கொள்ள ரஷ்யாவும் யோசனைகளை முன்வைத்துள்ளது. அவ்வாறு கடன் பெறுவதானால் அதில் பல்வேறு பிரச்சினைகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் பெற்றுக்கொள்வது தொடர்பில் ஜி 7 நாடுகளினால் ஒருசில வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவை இன்னும் நீக்கப்படவில்லை. அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தே அதிகளவு எரிபொருளை இறக்குமதி செய்கிறோம். மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து நாட்டுக்கு வரும் எரிபொருள் எந்தெந்த நாடுகளிலிருந்து கிடைக்கப் பெறுகின்றன என்பது எனக்கு தெரியது. தற்போதைய தகவல்களுக்கமைய டுபாய், ஓமான், கட்டார் போன்ற நாடுகளிலிருந்து வருகின்றன. ஆனால், அந்த நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் எரிபொருளுடன் ரஷ்யா மற்றும் ஈரானிலுள்ள எரிபொருளும் கலக்கப்படுவதாக பல்வேறு தகவல்கள் இருக்கின்றன என்றார்.

## மின்சார சபை...

காஞ்சன விஜேசேகரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அந்த அறிக்கையை விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் அமைச்சரவையிலும் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக அறிவித்துள்ள அமைச்சர் காஞ்சன விஜேசேகர இந்த யோசனைகளை உள்ளடங்கிய அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளித்து ட்விட்டர் கணக்கில் பதிவொன்றை இட்டு இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சார சபையை மறுசீரமைப்பு செய்வதற்கான யோசனைகளை முன்வைப்பதற்கான இந்தக் குழு கடந்த ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக்குழுவுக்கு எட்டு பேர் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டெழும் நம்பிக்கையுடன்...

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

வளர்ந்து வரும் சிறிய நாடாகிய எமது தாய் நாட்டின் பொருளாதார பின்னடைவு, பெரும் முடக்கத்தை ஏற்படுத்திய கொரோனா தொற்று மற்றும் உலக நாடுகளுக்கு இடையேயான மோதல்களால் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகள் சூழ்ந்துள்ள தற்போதைய நிலையில், எமது நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க காத்திரமான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் நாமும் எமது வாழ்விடங்களில் உள்ள நிலங்களை பயிர்ச்செய்கை மற்றும் நீர் வேளாண்மைக்கும், ஏனைய வளங்களை பொருளாதார தேடலுக்கான வாய்ப்பாகவும் பயன்படுத்தி சுய பொருளாதாரத்தில் எமது மக்களை தலை நிமிரச் செய்யும் முயற்களை அயராது முன்னெடுத்து வருகின்றேன்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியாலும், சுயநலன் சார்ந்த தரப்புகளின் தூண்டுதல்களுக்கு விலை போனவர்களினாலும் எனது அயராத முயற்சிகளுக்கு எதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் எதிர்கொள்ளும் அவலங்கள் தொடர வேண்டும் என்றும் மக்கள் நலப்பணிகள் எவ்வகையிலேனும் தடுத்து நிறுத்தப்பட்டு விட வேண்டும் என்றும் தீய எண்ணங் கொண்ட அசுரர்களை காலம் கணக்கு தீர்க்கும் என்பதே தீபாவளிப் பண்டிகை எடுத்தியம்பும் வரலாற்றுப் பாடமாகும். நரகாசூரன் அழிக்கப்பட்ட தீபத்திருநாளைக் கொண்டாடும் உங்களின் நம்பிக்கையை பாதுகாக்க நாம் அர்ப்பணிப்புடன் பாடுபடுவோம் என்ற மகிழ்ச்சியில் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகளை தெரிவிக்கின்றேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## ஆட்சி முறைமையில்...

மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நாட்டின் அரசியல்வாதிகளின் மகன்மார் மற்றும் மகள்மார் தத்தமது அரசியல் பிரவேசங்களுக்காக எப்போதும் தங்கள் பெற்றோரின் தேர்தல் தொகுதிகளையே பொறுப்பேற்றனர் எனவும், இந்த வகையில் கொழும்பு மத்திய தேர்தல் தொகுதி தனித்துவம் வாய்ந்ததாக இருந்தபோதிலும், தனது அரசியல் பயணத்தில் கஷ்ட பிரதேசத்திற்குச் சென்று அந்த பிரதேச மக்களைப் பற்றி அறிந்து கொண்டு தன்னல முயற்சியாகவே அரசியல் பயணத்தை ஆரம்பித்ததாகவும், இதற்குக் காரணம் நாட்டுக்கும் மக்களுக்கும் தம்மைப் பற்றி நிரூபிக்க வேண்டியதொரு தேவையிருந்தமையால் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன,மத,சாதி,வர்க்கப் பிரிவினைகளை ராஜபக்ஷவினர் உருவாக்கி நாட்டைத் துண்டு துண்டாக பிளவுபடுத்தி இன,மதங்களுக்கு இடையில் வெறுப்புணர்வை ஏற்படுத்தியதன் விளைவுதான் தற்போது நாடு எதிர்நோக்கியிருக்கும் அவலமான தலைவிதிக்குக் காரணம் எனவும், தங்கள் குடும்பத்தை முடிசூடவே அவர்கள் விரும்பினர் எனவும், அதில் எதேச்சாதிகாரமும், பிடிவாதமும் பொதிந்திருப்பதாகவும், அதன் காரணமாக 220 இலட்சம் மக்களும் மிகவும் ஆதரவற்றவர்களாக மாறியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். மலட்டுக் கொத்து, கருத்தடை நடவடிக்கைகளில் ஆரம்பித்து தகனம்,அடக்கம் வரை இந்த இன,மத பாகுபாடு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இன்று பல்வேறு தரப்பினரும் இனவாதம், மதவாதம் என்று கூக்குரலிடுகின்ற போதிலும் அன்று ஐக்கிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனையவர்கள் அதனை எதிர்க்கவில்லை எனவும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

22 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் ஏழு மூளைக்காரரின் பல் ஒன்று பறிபோனதாகவும், அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும், முடிந்தால் கொழும்பில் போட்டியிட்டுக்காட்டுமாறும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,படிப்படியாக ராஜபக்ஷ ஆதிக்கத்தை மக்கள் பலத்தால் இல்லாமலாக்குவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, ரணசிங்க பிரேமதாசவுக்குப் பின் மத்திய கொழும்பை திறம்பட வழிநடத்தும் மத்திய கொழும்பின் குட்டி பிரேமதாச முஜிபுர் ரஹ்மான் என புதிய பட்டம் சூட்டிய எதிர்க்கட்சித் தலைவர், எதிர்காலத்தில் அமையப்பெறும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படும் எனவும் வாக்குறுதியளித்தார்.

திகதி 21.10.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4915
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,038,520.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 3 3 7 2 8 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,481,942.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3157
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,281,900.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 03 28 40 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,007,886.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1370
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,944,880.00
வெற்றி இலக்சினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 0 0 3 5 5 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,534,631.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 945
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,160,220.00
வெற்றி இலக்கினம் X வெற்றி இலக்கங்கள் 04 43 44 61
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,674,339.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 224
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,285,120.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 03 24 40 42 விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,891,728.80

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1263
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,277,200.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 277,177,658.00
B 18 07 09 26 29
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk

திகதி 22.10.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4916
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,594,380.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 1 3 9 7 8 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,889,585.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3158
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,022,940.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 05 60 71 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,090,098.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1371
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,705,520.00
வெற்றி இலக்கங்கள் 2 3 4 2 3 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,584,268.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 946
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,255,540.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 13 60 67 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,804,282.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 225
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,225,748.80
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 01 03 17 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1264
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,792,440.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 277,410,950.00
X 06 23 61 71 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk

# மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் தீபாவளி பண்டிகையை கொண்டாட மக்கள் தயார் நிலை




(க.கிஷாந்தன்)

தீபாவளி பண்டிகை இன்று கொண்டாடப் படுகின்ற நிலையில், நேற்றைய தினமும் மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள நகரப்பகுதிகளுக்கு பெருமளவான மக்கள் வருகை தந்திருந்தனர்.

புத்தாடை, உணவுப்பொருட்கள் உட்பட மேலும் பல பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டினர். இதனால் வியாபாரம் களைகட்டியது.

ஹட்டன், தலவாக்கலை, கொட்டகலை, பூண்டுலோயா, நோர்வூட், மஸ்கெலியா, பொகவந்தலாவை, டயகம, புஸல்லாவை, நுவரெலியா, கம்பளை மற்றும் இதர மலையக நகர்ப் பகுதிகளில் நேற்று இந்நிலைமையே காணப்பட்டது. சில பகுதிகளில் மழைக்கு மத்தியிலும் வியாபார நடவடிக்கைகள் சூடுபிடித்திருந்தன.

நேற்று (23) ஹட்டனில் வர்த்தக நிலையங்களில் மக்கள் கூட்டம் அதிக அளவில் காணப்பட்டமையை காணக்கூடியதாக இருந்தது.


இதன்போது அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்தனர். பெருந்தோட்டப்பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியாக பெருமளவு பாதிக்கப்பட்ட இந்நிலையில், தீபாவளி முற்பணமாக சில தோட்டங்களில் மாத்திரம் 15,000 ரூபா வழங்கப்பட்டபோதிலும், இம்மக்கள் குடும்பங்களுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையையும் ஹட்டன் நகரில் காணக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொருட்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளதால் கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலேயே தாம் பண்டிகையை கொண்டாடுவதாக மக்கள் வெளியிடும் கருத்துகள் மூலம் அறியமுடிந்தது. வருடம் ஒருமுறைதான் பண்டிகை வருகிறது, அதனால்தான் கடன்பட்டாவது கொண்டாடுகின்றோம் என சிலர் கூறுவதை கேட்கமுடிந்தது.

கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களில் தொழிலுக்கு சென்றவர்கள் தமது வீடுகளை நோக்கி திரும்பினர். இதனால் பொதுபோக்குவரத்து சேவையும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

# நம்பிக்கை பெருநாளாக தீபாவளியை வரவேற்போம்

## ராமேஷ்வரன் எம்.பி. வாழ்த்து



(தலவாக்கலை செய்தியாளர்)

ஒளி பிறந்து, இருள் அகன்ற தீபாவளித் திருநாளை தேசமெங்கும் வழி பிறக்கும் நம்பிக்கை பெருநாளாக வரவேற்போம். மனதிலிருக்கும் நல்ல எண்ணங்களை வளர்த்து சமூக நலன்கள் நோக்கியதாக நல்ல மனப்பாங்கை வளர்க்கும் உள்ளமாக அக விளக்கு இறை அருள் மூலம் பிரகாசிக்க இந்த தீபாவளி நாளில் தீபம் ஏற்றி மகா விஷ்ணு பெருமானை மனதார பிரார்த்தித்துக்கொண்டு அனைத்து இந்து மக்களுக்கும் தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அனைத்து மக்களுக்கும் நல்ல பிரகாசமாக அவர்களது வாழ்வு சிறப்படையவும் இந்த தீபாவளி தினத்தில் நாம் ஏற்றும் தீபம் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் பக்தியையும் தரக்கூடியதாக அமைய நாம் அனைவரும் தீபம் ஏற்றி பிரார்த்திப்போம். முழு உலக வாழ் மக்களும் ஷேமமாய் இருக்க இந்த தீபாவளி நன்னாளில் குடும்ப உறவுகளுடன் தீபம் ஏற்றி மகா விஷ்ணுவை பிரார்த்திப் போமாக. மனதில் இருக்கும் தீய எண்ணங்கள் அகல வேண்டும். நல்ல எண்ணங்கள் நிரம்ப வேண்டும். அனைவரும் தீர்க்க ஆயுளுடன் சுபிட்சமாக வாழ இந்த தீபாவளி நாளில் நாங்கள் ஒன்று சேர்ந்து இலங்கையர்களாக அனைவருக் காகவும் பிரார்த்திப்போம். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு, அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் நல்ல பல திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வாழ்வில் புத்தொளி வீச வேண்டும். எமது மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும், பாதுகாப்பை உறுதிப் படுத்துவதிலும் நாம் என்றும் விழிப்புடன் செயற்படுவோம் என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழக கட்டமைப்பில் ஏற்படும் தாமதம் தடுக்கப்படுமென்கிறார் ஜனாதிபதி

## மாணவர்களுடனான சந்திப்பில் உறுதி




கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கும் போதே, இலங்கை பல்கலைக்கழகக் கட்டமைப்பில் நிலவும் காலதாமதம் தவிர்க்கப்பட்டு மாணவர்கள் குறித்த காலத்திற்குள் கல்வியை நிறைவு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் மாணவத் தலைவர்களுடன் நேற்றுமுன் தினம் (22) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில், றோயல் கல்லூரியின் சிரேஷ்ட மாணவத் தலைவர் கவீஷ ரத்நாயக்க தலைமையில் மாணவத் தலைவர்கள் சபையின் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கல்லூரியின் விவகாரங்கள் மற்றும் நாட்டின் கல்வித்துறையின் நிலைமைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்ட துடன், கல்வித்துறையின் முன்னேற் றத்திற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி பதிலளித்தார்.

இங்கு, பல்கலைக்கழகக் கல்வி குறித்து ஜனாதிபதி மாணவர்களிடம் கேட்டறிந்ததோடு, வெளிநாட்டு உயர்கல்வியில் பட்டம் பெற எடுக்கும் காலத்திற்கும் உள்நாட்டு பல்கலைக் கழகத்தில் எடுக்கும் காலத்திற்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக மாணவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அதற்கான முறையான தீர்வு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார். அத்துடன், வெளிநாட்டுக் கல்வியை விட உள்நாட்டுப் பல்கலைக் கழக கல்வியின் பெறுமதியை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாடசாலைக் கல்வியை முடித்து உயர்கல்விக்கு தகுதி பெறும் மாணவர்களின் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், குருநாகல், மட்டக்களப்பு உட்பட பல பிரதேசங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் விரைவில் திறக்கப்படும் என்றும் தெரிவித்தார். அதேபோன்று, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை தனியான வளாகமாக மாற்றுவதற்கும் தேசிய வர்த்தக முகாமைத்துவ பாடசாலை (NSBM) மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (SLIIT) ஆகிய தனியார் பல்கலைக்கழகங்களுக்கு, தேசிய பல்கலைக்கழக தகைமைகளை வழங்குவதற்கு உள்ள வாய்ப்புகள் தொடர்பில் தாங்கள் செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகப் பகிடிவதைகள் குறித்து மாணவர்களிடம் கேட்டறிந்த ஜனாதிபதி, றோயல் கல்லூரி, தர்ஸ்டன் கல்லூரி, ஆனந்தா கல்லூரி, டி.எஸ். சேனநாயக்கா வித்தியாலயம் போன்ற கொழும்பு பாடசாலைகளிலிருந்து வருடாந்தம் அதிகளவான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுவதாக கூறப்படுகின்ற போதிலும், புதிய மாணவர் பகிடிவ தைகள் இடம்பெறும் போது அவர்கள் அது தொடர்பில் மௌனமாக இருப்ப தையே காணமுடிகின்றதாகவும் குறிப்பிட்டார்.

பகிடிவதைகளை தடுக்கும் கடமை இந்தப் பாடசாலைகளுக்கு இருப்ப தாகவும் அதற்காக பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கு பாடசாலை நாட்களில் இருந்தே பொறுப்பான சில பணிகளை செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட் டினார்.

பல்கலைக்கழகக் கல்வி மிகவும் அழகானது எனவும் பகிடிவதையால் மாணவர்கள் உடல் மற்றும் மன உளைச்சலுக்கு உள்ளாகும் நிலைமை அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி அதற்கான தீர்வுகளை முன்வைக்க தாம் செயற்பட்டு வருவதாகவும் வலியுறுத்தினார்.

றோயல் கல்லூரியின் அபிவிருத் திக்காகவும் கல்லூரியின் நற்பெயருக் காகவும் மாணவர் தலைவர் சபை ஆற்றுகின்ற பங்களிப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராட்டினார்.

இந்த நிகழ்வில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.




கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் தீபாவளித் திருநாளை முன்னிட்டு கண்டியிலுள்ள தோட்ட மக்கள் 600பேருக்கு உலருணவுப் பொதிகள் வழங்குதல் மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் போன்றன நேற்று கண்டி அஸ்கிரிய விளையாட்டு மைதானத்தில் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்பழகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 3 மில்லியன் ரூபா செலவில் கண்டி மாவட்டத்திலுள்ள தோட்டப்புற பிரதேசங்களிலுள்ள கலஹா, தெல்தோட்டை, பன்வில, ரங்கல, உன்னஸ்கிரிய உள்ளிட்ட பின்தங்கிய தோட்டப்புற தமிழ் மக்களுக்கு இந்த உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள், சங்கீத கதிரை உள்ளிட்ட பல தீபாவளி பண்டிகை விளையாட்டுக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இக்பால் அலி)

# தீப ஒளியின் மகிமையால் அரசியல், பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டெழுவோம்

## அங்கஜன் எம்.பி.



(சாவகச்சேரி நிருபர்)

தீப ஒளியின் மகிமையால் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாடும், நாட்டு மக்களும் மீண்டெழுவார்கள் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில்;

தீபத்திருநாளைக் கொண்டாடும் உலக வாழ் இந்துக்கள் அனைவருக்கும் எனது தீபாவளி தின நல் வாழ்த்துக்கள்.

தர்மம் தழைப்பதற்கும் அதர்மம் அழிவதற்குமாக கொண்டாடப்படும் திருநாளே தீபத்திருநாள்.

தீமைகள் பல புரிந்த நரகாசுரனை இறைவன் ஆட்கொண்ட தினமாக தீபாவளித் திருநாளைக் கொண்டாடி வருகிறோம்.

இலங்கைத் திருநாட்டில் தற்போது நிலவி வருகின்ற அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளை தீப ஒளி தனது மகிமையால் தீர்க்க வேண்டும்.

கடந்த வருடம் கொரோனா பெருந்தொற்று எம்மை ஆட்கொண்டிருந்தது. இம்முறை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி படிப்படியாக மீண்டு வர முனைகிறோம். நாடும் நாட்டு மக்களும் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக ஸ்திரத்தன்மை அடையும் அந்த நன்நாளின் தொடக்க நாளாக இந்நாள் அமைய வாழ்த்துகிறேன்.

உலக மக்களின் இல்லங்களிலும் உள்ளங்களிலும் துன்பங்கள் நீங்கி நன்மைகள் நிறைய இத் தீபத் திருநாள் உறுதுணையாக அமையும் என மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஒக்டோபர் 24ஆம் திகதி, திங்கட்கிழமை

# 22 ஆவது திருத்தம் ரணிலின் வெற்றியல்ல!

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் நிறைவேறிய கையோடு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கைகள் கட்டப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. மேலோட்டமாகப் பார்த்தால் அதில் உண்மை இல்லாமல் இல்லை. எல்லாவற்றுக்கும் அழுத்தங்களை நேரடியாகவும் மறைமுகமாவும் வழங்கிக்கொண்டிருந்த பொதுஜன பெரமுனவின் பெசில் ராஜபக்ஷவின் எதேச்சாதிகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனாலும், சில விடயங்களை ஆராயவேண்டியுள்ளது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மூலம் நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டன. தாம் அந்த ஜனாதிபதி பதவியில் இருந்து கொண்டு, தமது அந்த அதிகாரங்களை வெட்டிக் குறைக்க முன்னின்றுழைத்த உண்மையான ஜனநாயக அரசியல் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனதான்.

அந்த 19ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்த நல்லாட்சி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. ஆக, 48 எம்.பிக்களை மட்டும் வைத்துக் கொண்டுதான் அந்த அரசை அவர் அப்போது கொண்டிழுத்தார். அத்தகைய சிறுபான்மை அரசு இத்துணை பெரிய அரசமைப்பு மாற்றத்தை செய்வதற்குக் காலாகவும், உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருந்து அதைச் செய்வித்தவர் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவே. அதற்கு வேறு யாரும் அரசியல் உரிமை கோருவது அபத்தமானது.

அந்த 19ஆவது திருத்தத்தின் மூலம் வெட்டப்பட்ட அதிகாரங்களை 20ஆவது திருத்தம் மூலம் மீள சுவீகரித்துக் கொண்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அது நமக்குத் தெரிந்த சரித்திரம். இப்போது மீண்டும் 19ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்காக 22ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கூறி மெச்சப்படுகின்றது. தமது பதவிக்கான அதிகாரத்தைத் தாமே வெட்டிக் குறைக்கும் முயற்சியை முன்னெடுத்த உண்மையான ஜனநாயக ஆட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே என்ற புகழாரம் வேறு இப்போது சூட்டப்படுகின்றது. அவ்வளவும் அபத்தம். இது விடயத்தில் மைத்ரிபால சிறிசேனவுக்குக் கிட்டவும் நிறுத்தும் தகுதி கொண்டவரல்லர் ரணில் விக்கிரமசிங்க என்பதுதான் உண்மை.

ஆறு ஆண்டு காலப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மைத்ரி 19ஆவது திருத்தன் மூலம் அதனை ஐந்து ஆண்டுகளாக வெட்டிக் குறைக்க இணங்கினார். பின்னர் பதவிக்காலத்தின் முடிவில் அந்த ஓராண்டை மீளப் பெறுவதற்கு வழியிருக்கின்றதா என்று அவர் ஆராய்ந்தார் என்பது வேறு விடயம்.

இப்போது 19ஆவது திருத்தத்தின் மூலம் வெட்டிக் குறைத்த ஜனாதிபதியின் நிறைவேற்ற அதிகாரங்களில் பல 22இல் மீள வெட்டிக் குறைக்கப்படவில்லை. அதுவோர் பம்மாத்து நிறைவேற்றதிகாரக் குறைப்புத்தான்.

* எந்த அமைச்சையும் ஜனாதிபதி தம் வசம் வைத்திருக்க முடியும்.
* தாம் விரும்பிய நேரத்தில் பிரதமரை வீட்டுக்கு அனுப்பவும் விரும்பியவரைப் பிரதமராக நியமிக்கவும் ஜனாதிபதியால் முடியும்.
* அமைச்சரவை நியமனத்தில் பிரதமருக்கான தனித்துவ உரிமை பறிக்கப்பட்டுள்ளது.
* நாலரை வருடங்களின் பின்னர்தான் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கலாம் என்ற விடயம் இரண்டரை வருடங்களாக உள்ளது.
* சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கும் விடயத்தில் சுயாதீனமும் அரசியல் கலப்பின்மையும் முற்றாகச் சிதறடிக்கப்பட்டுள்ளன.

இப்படி 19க்கும், 22க்கும் நிறைவேற்று அதிகாரக் கட்டுப்பாடுகளில் பெரு வித்தியாசம். 19இன் சிறப்புக்கும் பெருமைக்கும் கிட்டவும் வராது 22ஆம் திருத்தம். ஆனால், பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்த ஜனநாயகத் தலைவர் ரணில் எனப் படம் போடுகின்றார்கள். ஏணி வைத்து ஏறினாலும், இந்த விடயத்தில் மைத்ரிபால சிறிசேனவுக்குக் கிட்ட ரணிலோ, ஏனைய ஜனாதிபதிகளோ வர முடியாது என்பதுதான் நிஜம்.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டிருக்கும் பெசில் ராஜபக்ஷவின் தலையீடு, 22ஆவது திருத்தத்தின் மூலம் ஓரங்கட்டப்பட்டுள்ளது என்பதற்காக மட்டும் ராஜபக்ஷக்களின் எதிர்ப்பு அரசியலுக்காக ரணிலைப் பாராட்டலாம் என்பதற்கப்பால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எதனையும் ரணில் செய்துவிடவில்லை. அதுவே உண்மை. இது ரணிலினதோ அல்லது மக்களினதோ வெற்றியல்ல என்பதே உண்மை.

## இன்றைய நாளில்...

★ 1605– முகலாயப் பேரரசர் ஜஹாங்கீரின் முடிசூட்டு விழா இடம்பெற்றது.
★ 1801 – மருது பாண்டிய சகோதரர்களும் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மன்னர் குடும்பத்தாரும் வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்டனர்.
★ 1857 – உலகின் முதலாவது உதைபந்தாட்ட அணி செபீல்ட் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.
★ 1945 – ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.
★ 1946 – வி-2 இல.13 என்ற ரொக்கெட்டில் பொருத்தப்பட்ட புகைப்படக்கருவி மூலம் முதன்முதலாக விண்ணிலிருந்து பூமியின் புகைப்படம் எடுக்கப்பட்டது.
★ 1949 – ஐக்கிய நாடுகள் தலைமையகத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது.
★ 1994 – கொழும்பில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நடந்த குண்டுவெடிப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசுத்தலைவர் வேட்பாளர் காமினி திசாநாயக்க உட்பட 52 பேர் கொல்லப்பட்டனர்.
★ 1998 – டீப் ஸ்பேஸ் 1 என்ற வால்வெள்ளி/சிறுகோள் திட்டம் ஆரம்பமானது.
★ 2007 – சந்திரனின் சுற்றுப்பாதையில் நிலவைச் சுற்றிவரும் முதல் சீன ஆளற்ற விண்கலம் சாங்-ஒன்று தென்மேற்கு சீனாவின் ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

# யாழ். போதனா மருத்துவமனையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை

## இறப்புக்குப் பின் சிறுநீரக தானம் செய்யும் நன்கொடையாளர்களைச் சமூகம் எதிர்பார்க்கிறது


Dr.சரித பெர்னாண்டோ | Dr.பிரசாத் | Dr.பிரம்மா | Dr.மதிவாணன் | Dr.வினோஜன்

இலங்கையில் சிறுநீரகமாற்று சத்திர சிகிச்சையானது முதன்முதலில் 1985 ஆம் ஆண்டு பேராசிரியர் ஷெரீவ்தீன், பேராசிரியர் ரிஸ்வி ஷெரீவ் முதலான விசேட மருத்துவ நிபுணர்களடங்கிய குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொழும்பு தேசிய மருத்துவமனை, கண்டி தேசிய மருத்துவமனை, மாளிகாவத்தையிலுள்ள தேசிய இரத்தச் சுத்திகரிப்பு சிறுநீரக மாற்று நிறுவனம் (The National Institute of Nephrology Dialysis Transplantation), கராப்பிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய போதனா மருத்துவமனைகளில் சிறுநீரக மாற்று சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.



இந்த வகையில் யாழ். போதனா மருத்துவமனையில் முதற்தடவையாக 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி சிறுநீரகம் செயலிழந்த இருவருக்கு, சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. யாழ். போதனா மருத்துவமனையில் தற்போது வரை 7 பேருக்கு வெற்றிகரமாக சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். போதனா மருத்துவமனையில் குருதிக் குழாய் சத்திர சிகிச்சைத்துறையில் விசேட பயிற்சி பெற்ற சத்திர சிகிச்சை நிபுணர் சிவலிங்கம் மதிவாணன் (Consultant Surgeon, Special Interest in Vascular Surgery), கண்டி தேசிய மருத்துவமனையில் கடமையாற்றும் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திர சிகிச்சை நிபுணர் பிரசாத் சுப்பிரமணியம் (Consultant Vascular & Transplant Surgeon), யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திரசிகிச்சை நிபுணருமான சச்சிதானந்தன் வினோஜன் (Consultant Vascular & Transplant Surgeon), கண்டி தேசிய வைத்தியசாலையின் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திரசிகிச்சை நிபுணர் சரித்த பெர்னாண்டோ (Consultant Vascular & Transplant Surgeon), யாழ். போதனா மருத்துவமனையின் சிறுநீரகவியல் சிகிச்சை நிபுணரும் மருத்துவப்பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான மருத்துவர் பிரம்மா தங்கராஜா (Consultant Nephrologist) மற்றும் யாழ். போதனா மருத்துவமனையின் சிறுநீரகவியல் சிகிச்சை நிபுணர் வேதநாதன் பவந்தன் (Consultant Nephrologist), முதலான சிறப்பு மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவினர் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட விசேட மருத்துவ நிபுணர்களுடன் யாழ். போதனா மருத்துவமனை இரத்த மாற்று விசேட மருத்துவ நிபுணர்கள் (Consultant Transfusionists), உணர்வழியியல் சிகிச்சை நிபுணர்கள் (Consultant Anesthesiologists), மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவமனை நிர்வாகத்தினர் முதலான அணியினர் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ள வழங்கிய பங்களிப்பு என்பது ஈடிணையற்றது.

சிறுநீரகமாற்று சத்திர சிகிச்சையானது தேசிய வைத்தியசாலையுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாகும். இலங்கையின் 2ஆவது தேசிய வைத்தியசாலையாக விளங்கும் கண்டி தேசிய வைத்தியசாலையுடன் இணைந்தே நாம் யாழ்ப்பாணத்தில் சிறுநீரக மாற்று சிகிச்சையை மேற்கொள்கின்றோம்.

எமது சமூகத்தில் சிறுநீரக செயலிழப்புக் காரணமாக இளம் சமூகத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக 5 வயது சிறுவர்கள் முதல் 75 வயது முதியவர்கள் வரை ஹீமோடயலிசிஸ் எனப்படும் இரத்தச் சுத்திகரிப்புச் செய்வதற்காக மருத்துவமனைக்கு வருகிறார்கள். யாழ். போதனா மருத்துவமனையில் 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மாத்திரம் 145 நபர்களுக்கு 962 தடவைகள் இரத்தச்சுத்திகரிப்பு (Haemodialysis) செய்யப்பட்டுள்ளது. இவர்களில் சில சிறுவர்களுக்கு வாரத்தில் 3 அல்லது 4 தடவைகள் குருதிச் சுத்திகரிப்புச் செய்யப்படுகிறது. மேலும் பலர் ஒவ்வொரு வாரமும் இரத்தச் சுத்திகரிப்புச் செய்து வருகின்றனர். இவ்வாறானவர்களது வாழ்வு மருத்துவமனையுடனேயே இணைந்துள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையில் இயங்கிவரும் இரத்தச்சுத்திகரிப்பு அலகானது (Dialysis Unit) 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த அலகானது சிறிய ஓரிடத்தில் மிகக்குறைந்த ஆளணியினருடன் சிறந்த முறையில் 24 மணிநேரமும் இயங்கிவரும் ஒரு விசேட மருத்துவ அலகாகும். சர்வதேச மருத்துவக் குழுவின்(IMHO-USA) நிதியுதவியுடன் இதனைத் தற்காலிகமாக விரிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அரச உதவியுடன் 6 தளங்களைக் கொண்ட நிரந்தரக் கட்டடத் தொகுதி அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனைக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் முதலான மாவட்டங்களில் இருந்தும் “டயலிசிஸ்” செய்வதற்காக பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு பலர் வருகிறார்கள். ஒருவர் “டயலிசிஸ்” செய்வதற்காக வரும்போது அவருக்கு உதவியாக இன்னொருவர் வருகின்றார். இதனால் குடும்பம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது. ஒருவர் சிறுநீரக செயலிழப்புக் காரணமாக “டயலிசிஸ்” செய்யும் மருத்துவப் பொறிமுறைக்கு வருகின்றபோது அவரைச் சார்ந்த குடும்பத்தின் சுதந்திரம் அல்லது சமூகச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. “டயலிசிஸ்” செய்யும் பெரும்பாலானவர்களது வாழ்க்கை இவ்வாறு பல சவால்களை எதிர்நோக்கியிருக்கும்.



“டயலிசிஸ்” செய்யும் நிலைக்கு வந்த பெரும்பாலானோர் சிறுநீரக தானத்தை எதிர்பார்த்திருப்பர். சிறுநீரகம் செயலிழந்த ஒருவர் அவரது உடற்தகுதி, அவருக்குள்ள ஏனைய பாதிப்புகள், வயது என்பவற்றைக் கருத்திற்கொண்டு சிறுநீரகவியல் விசேட மருத்துவ நிபுணர்களால் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்கு சிபாரிசு செய்யப்படுவார். யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காக காத்திருக்கின்றார்கள். ஆனாலும், மூளைச்சாவடைந்த ஒருவரிடமிருந்து சிறுநீரகத்தைத் தானமாகப் பெறுவதென்பது இலகுவானதல்ல.

இறப்புக்குப் பின்னர் சிறுநீரக தானம் செய்யும் நன்கொடையாளர்கள் கௌரவத்துக்குரியவர்கள்.

சிறுநீரகத்தை தானமாகப் பெற்ற ஒருவருக்கு புதிய ஒரு வாழ்வு கிடைக்கிறது. ஒருவருக்கு சிறுநீரகத்தை வழங்குவது என்பது பெறுபவருக்கு மட்டுமன்றி அவரைச் சார்ந்த சமூகத்துக்கும் புதியதொரு வாழ்வை, எதிர்காலத்தைக் கொடுக்கிறது. சுதந்திரத்தை வழங்குகிறது. நம்பிக்கையைக் கொடுக்கிறது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் சுவாசிப்பதில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கும்போது அவருக்குச் செயற்கைச் சுவாசம் வழங்கி உயிர்வாழ்வதற்கான உதவி வழங்கப்படுகிறது. இந்நிலையில், ஒருவரது மூளையின் செயற்பாடு அற்றுப்போகின்றபோது அதனை மூளைச்சாவு என்பார்கள். இவ்வாறு மூளைச் சாவடைந்த ஒருவரது சிறுநீரகத்தைத் தானமாகப் பெறும் நடைமுறையே தற்சமயம் வடபகுதியில் காணப்படுகிறது. ஒருவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டு 12 மணிநேரத்துக்குள் சத்திர சிகிச்சை செய்து சிறுநீரகத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவ உபகரணங்களது உதவியின் மூலம் சுவாசிக்கும் ஒருவருடைய (Intubated patient) மூளையின் இறப்பை, பல்வேறு வழிகளால் மருத்துவர்கள் உறுதிப்படுத்துவர். மூளைச்சாவு என்பது 100 சதவீதம் மரணமடைந்த நிலையேயாகும். ஆனாலும், மூளைச் சாவடைந்த பின்னரும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கைச் சுவாசம், மற்றும் மருந்துகள் வழங்குவதன் மூலம் ஒருவரது இருதயம் செயற்பட்டவாறே இருக்கும். மூளைச் சாவடைந்தவருக்கு மருந்துகள் வழங்குவது படிப்படியாகக் குறைக்கப்படும். மூளைச் சாவடைந்தவர் உயிர் பிழைப்பார் என்ற தவறான நம்பிக்கை பொதுமக்களிடையே காணப்படுகிறது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் மூளைச் சாவடைந்த ஒருவரது குடும்ப உறுப்பினர்களை அல்லது அக்குடும்பத்தில் பொறுப்பு வாய்ந்த ஒரு நபரை அணுகி இறந்தவரது சிறுநீரகங்களைத் தானமாக வழங்குமாறு கேட்பது மருத்துவ நிபுணர்களுக்கு மிகவும் இக்கட்டான ஒரு நிலையாகும். இத்தகைய குடும்பத்தைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் துறைசார் மருத்துவ வல்லுநர்கள் நீண்ட உரையாடல் மேற்கொண்டு இறந்தவரது சிறுநீரகத்தைத் தானமாகப் பெறல் வேண்டும்.

மூளைச் சாவடைந்தவர்களது சிறுநீரகங்களைத் தானமாக வழங்கி இருவருக்கு வாழ்வு கொடுக்க முன்வருவோர் கௌரவத்துக்குரியவர்கள். போற்றப்பட வேண்டியவர்கள்.

இலங்கையில் சிறுநீரகத்தை விற்பதோ அல்லது மறைமுகமாக சிறுநீரக விற்பனையைத் தூண்டுவதோ சட்ட விரோதமானதாகும். மூளைச் சாவடைந்தவர்களது சிறுநீரகத்தைத் தானமாகப் பெற்று சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை செய்யும் நடைமுறையானது அரச மருத்துமனைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது.

**தென்பகுதியிலிருந்து வடபகுதி மக்களுக்குத் தானமாகக் கிடைத்த சிறுநீரகங்கள்**

பிறரது உயிரைக் காக்கும் சிறுநீரக தானத்தை நாம் இறந்த பின்னர் செய்வதற்கு எமது சமூகம் முன்வரல் வேண்டும். ஒருவரது இறப்புக்குப் பின்னரும் அவர் வழங்கும் சிறுநீரக தானம் இருவருக்கு உயிர் வழங்குவது போன்றதாகும். இறந்த பின்னர் சிறுநீரக தானத்தைச் செய்வதற்கு சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும். ஒருவர் தனது இறப்புக்குப் பின்னர் சிறுநீரக தானத்தைச் செய்யுமாறு தனது குடும்ப உறுப்பினர்களுக்குக் கூறிவைக்கும்போது அச்சமூகத்தில் சிறுநீரக தானம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படும்.

தென்னிலங்கையைச் சேர்ந்த சகோதர இனத்தவர்கள் நன்கொடையாக வழங்கிய சிறுநீரகங்களே வடபகுதியில் சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்குச் சிறுநீரக மாற்று சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டுள்ளமையை இங்கு நாம் நன்றியுடன் குறிப்பிடல் வேண்டும். அதேவேளை இங்கிருந்தும் சிறுநீரகங்கள் தென்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

இறப்புக்குப் பின்னர் சிறுநீரகங்களை வழங்கி பிறருக்கு வாழ்வுகொடுக்கும் நன்கொடையாளர்களைச் சமூகம் எதிர்பார்க்கிறது. சிறுநீரக தானம் என்பது உயிர்காக்கும் அறமாகும்.

**மருத்துவர் த.சத்தியமூர்த்தி**
பணிப்பாளர்
போதனா மருத்துவமனை
யாழ்ப்பாணம்.

## நக்கல் நமசிவாயம்

நரகாசுரர்களை விரட்டினத்துக்குத்தான் தீபாவளியெண்டா, இந்த வருஷம் எங்களுக்கு பல தீபாவளி பண்டிகைகள் வந்து போயிருக்குது என்னங்கோ...



# மாநகர சபைக்குச் சொந்தமான காணியை அதிகார சபைக்கு விட்டுக்கொடுக்க மாட்டோம்

## முதல்வர் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றம்



(செ.திவாகரன்)

நுவரெலியா மாநகரசபைக்கு சொந்தமான கிரகரி ஏரியை சுற்றியுள்ள காணியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதற்கு அனுமதி வழங்கிய அமைச்சரவை பத்திரத்தை இரத்துச் செய்யுமாறு கோரி நுவரெலியா மாநகர சபை ஆளுங்கட்சி உறுப்பினர்களும் எதிர்கட்சி உறுப்பினர்களும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள்.

நுவரெலியா மாநகரசபையின் ஒக்டோபர் மாதத்திற்கான மாதாந்த பொதுச் சபைக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நுவரெலியா மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரத்ன தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நுவரெலியா மாநகரசபை கட்டுப்பாட்டிலுள்ள பெறுமதியான காணிகளை நகர அபிவிருத்தி அதிகாரசபை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எக்காரணம் கொண்டும் நுவரெலியா மாநகரசபை கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்க முடியாதென மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரத்ன முன்வைத்த தீர்மானத்திற்கு கூட்டத்தில் கலந்துகொண்ட ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு வழங்கி ஏகமானதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அங்கு மாநகரபை ஆளுங்கட்சி உறுப்பினர் சுசந்த பலிஹவடன உரையாற்றுகையில், நுவரெலியாவில் இதற்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்துமே தோல்வியடைந்துள்ளன. உதாரணமாக நுவரெலியாவில் மாநகரசபையால் ஆரம்பிக்கப்பட்ட சுற்றுலா விடுதியை நகர அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்று தற்பொழுது மூடப்பட்டுள்ளது.

அதேபோன்று நுவரெலியாவில் நகர அபிவிருத்தித் திட்டங்கள் முற்றுப் பெறாத நிலையில் இருக்கின்றது. தற்பொழுது கிரகரி ஏரியை சுற்றியுள்ள காணியில் நுவரெலியா மாநகரபை கிரகரி பூங்கா அமைத்து சுற்றுலா பயணிகள் கண்டுகளிப்பதற்கான அபிவிருத்திகளை செய்து பராமரித்து வருகின்றது. இக்காணியை நகர அபிவிருத்தி சபை பொறுப்பேற்றால் இதனையும் காடாக்கிவிடுவார்கள். எனவே, இந்த காணியை வழங்க முடியாதென கூறினார்.

நுவரெலியா மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரத்ன கருத்து தெரிவிக்கையில், நகர அபிவிருத்தி அதிகார சபையினர் பெற்றுகொண்ட அமைச்சரவை அங்கீகாரத்தை உடனடியாக இரத்துச் செய்யக் கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தேவையான ஆவணங்களை நுவரெலியா மாநகர சபை உடனடியாக தயாரித்து அனுப்புவதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளும்படி மாநக சபையின் ஆணையாளர் திருமதி சுஜீவா போதிமான்னவிற்கு பணிப்புரை வழங்கினார்.

# சிக்கனமாகக் கொண்டாடப்பட வேண்டிய தீபத்திருநாள்;

## வாழ்த்துச் செய்தியில் இராதா எம்.பி. தெரிவிப்பு



பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மிகவும் நிதானமாகவும் சிக்கனமாகவும் கொண்டாட வேண்டிய ஒரு தீபாவளியாக இது அமைந்திருக்கின்றது. உலகெங்கும் வாழுகின்ற அனைத்து உறவுகளையும் இந்நாளில் வாழ்த்து வதில் மகிழ்ச்சியடைகின்றேன் என நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் வேலுசாமி இராதா கிருஷ்ணன் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் தீபாவளியை மிகவும் சிறப்பாக ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வந்தார்கள். ஆனால், இம்முறை தீபாவளியை பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நாளில் தீபாவளியைக் கொண்டாடுகின்ற நீங்கள் அனைவரும் மிகவும் அமைதியாகவும் ஏனையவர்களின் மனது புண்படாத வகையிலும் இந்நாளைக் கொண்டாட வேண்டும் என அன்பாக வேண்டிக் கொள்கின்றேன்.

பலரும் உண்ண உணவில்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்ற வேளையில் நாம் ஆரவார மாக இந்தத் தீபாவளியை கொண்டாடுவது அவர்களின் மனதை புண்படுத்தும்.

எனவே, இந்நாளில் உணவில்லாத உங்கள் அயலவர்களுக்கு ஒரு வேளை உணவை கொடுக்க முடியுமாக இருந்தால் அது இந்த தீபாவளியில் மனநிறைவை ஏற்படுத்தும்.

சிந்தித்து சூழ்நிலைகளை புரிந்துகொண்டு செயலாற்றுவோம் என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# அநீதி இருள் விலகி வாழ்வில் ஒளி வீசட்டும்;

## ஆனந்தகுமார் தீபாவளி வாழ்த்து



அநீதி இருள் விலகி சமூகநீதி வெளிச்சம் பரவ தீபாவளித் திருநாள்வகை செய்யட்டும். தமிழ் மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் சமூகநீதி ஒளியால் கிடைக்கும் நல்லின்பம் மட்டுமின்றி அமைதி, வளம், வளர்ச்சி, ஒற்றுமை, நல்லிணக்கம், சகோதரத்துவம், பன்முகத்தன்மை என அனைத்து நன்மைகளும் கிடைக்க வேண்டுமென ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களின் வாழ்விலும் இன்பம் பெருகிட தீமைகள் அகன்று நன்மைகள் இந்த தீபாவளி திருநாளில் பிறக்கும். இந்நன்னாள் நாட்டு மக்களிடையே ஒற்றுமை உணர்வையும், நல்லெண்ணத்தையும், சகோதரத்துவத்தையும் பலப்படுத்துகிறது.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் அனைத்து மக்களினதும் வாழ்வு மீள வழமைக்கு திரும்பிட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் செயல்படும் என்று நாம் முழுமையாக நம்புகிறோம். அதற்கான ஆரம்பகட்டப் பணிகளை அவர் செய்துள்ளார்.

கடந்த காலத்தைவிட எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை ஜனாதிபதி குறைத்துள்ளார். இந்த தீபாவளி பண்டிகையோடு நாடு மீண்டும் வழமைக்கு திரும்ப இறைவனை பிரார்த்திக்கிறேன் என்றும் அவர் தமது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.

# ஹட்டன் சமுர்த்தி வங்கிக்கு எதிராக ஜனாதிபதி செயலகத்தில் முறைப்பாடு

## நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் இராமச்சந்திரன் தெரிவிப்பு



"நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், சமுர்த்தி கொடுப்பனவே ஓரளவு ஆறுதல் நிவாரணமாக இருந்து வருகின்றது. இந்நிலையில், அந்தக் கொடுப்பனவையும் வழங்காமல் இழுத்தடிப்பது பெரும் அநீதியாகும். இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் உட்பட உரிய தரப்புகளுக்கு முறைப்பாடுகள் அனுப்பிவைக்கப்படும்" - என்று நோர்வூட் பிரதேச சபையின் தொழிலாளர் தேசிய முன்னணி உறுப்பினரான மு. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஹட்டன் சமுர்த்தி வங்கிக்குட்பட்ட லெதண்டி 319 கே கிராமசேவகர் பிரிவில் 210 சமுர்த்தி பயனாளிகள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்பவர்கள்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நுவரெலியா மாவட்டத்தில் ஏனைய சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி பயனாளிகளுக்கு முன்கூட்டியே கொடுப்பனவை வழங்கியுள்ளன. எனினும், லெதண்டி 319 கே கிராமசேவகர் பிரிவில் உள்ள பயனாளிகளுக்கு இன்னமும் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

கடந்த ஒரு வார காலமாக ஹட்டன் சமூர்த்தி வங்கிக்கு சென்றாலும், கொடுப்பனவு வழங்கப்படவில்லை. ஏமாற்றத்துடனேயே வீடு திரும்புகின்றோம் என சமுர்த்தி பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் என்னிடமும் முறையிட்டுள்ளனர். ஒரு சிலர் கடன் தவணை கட்டணத்தை செலுத்தாததால்தான் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என ஹட்டன் சமுர்த்தி வங்கி முகாமையாளர் குறிப்பிட்டார் எனவும் கூறினர்.

ஒரு சிலருக்காக ஒட்டுமொத்த மக்களையும் பழிவாங்கும் நடவடிக்கை ஏற்புடையதல்ல. கடன் தவணையை செலுத்த முடியாவிட்டால் கூட சமுர்த்தி கொடுப்பனவை நிறுத்த முடியாது என்பதே ஏற்பாடாகும். அப்படியிருந்தும் வங்கி முகாமையாளர் மனிதநேயமற்ற முறையில் நடந்துகொண்டுள்ளார். வங்கியில் வைப்பில் உள்ள பணத்தைக்கூட மீளப் பெறுவதற்கு அனுமதி மறுத்துள்ளார் எனவும் மக்கள் குறிப்பிடுகின்றனர். தீபாவளிப் பண்டிகை தமிழர்களுக்கு முக்கியமானது.

கிடைக்கும் சமுர்த்தி பணத்தை வைத்தாவது எதையாவது வாங்குவதற்கு அவர்கள் திட்டமிட்டிருக்கலாம். எனவே, கொடுப்பனவை இழுத்தடிப்பது பெரும் தவறாகும்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் உட்பட உரிய தரப்புகளுக்கு அறிவிக்கப்படும். தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரத்தின் கவனத்துக்கும் இந்த விடயத்தை கொண்டுவந்துள்ளேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற பண்பாட்டு விழா









யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் , யாழ். செயலகமும், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்திய யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை (21) யாழிலுள்ள தனியார் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் தலைமையில் இடப்பெற்ற இவ்விழாவில், பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த விழாவில் , 'யாழ்ப்பாணம்' எனும் நூல் வெளியீடும் , 'இளங்கலைஞர்' மற்றும் 'யாழ் முத்து' ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டன.

# கோப்பாயில் போதைப்பொருளுடன் இளைஞன் கைது

(யாழ். நிருபர்)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் பகுதியில் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 25 வயதுடைய இளைஞன் நேற்று முன்தினம் (22) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த இளைஞனை கைதுசெய்த பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின்போது, தான் கடந்த ஐந்து வருட காலமாக போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாகவும் அதிலிருந்து மீண்டு வர தன்னால் முடியாதுள்ளதால் தொடர்ந்து போதைப்பொருளை நுகர்ந்து வருவதாகவும், ஆனந்தபுரம் பகுதியிலேயே போதைப்பொருளை தன்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ள தாகவும் குறித்த இளைஞன் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழகத் தொழில்நுட்பப் பீடத்தின் ஆய்வு மாநாடு








(யாழ். நிருபர்)

'புதிய இயல்பு நிலையில் எதிர்காலத்தைச் செழுமைப்படுத்தல்' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டுவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரில் தொழில்நுட்பப் பீடத்தினால் நடத்தப்பட்ட 'தொழில்நுட்ப முன்னேற்றமும், புத்தாக்கமும்' என்ற தலைப்பிலான ஆய்வு மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை (21) கிளிநொச்சி, அறிவியல் நகரில் அமைந்துள்ள தொழில்நுட்பப் பீட மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொழில்நுட்பப் பீடத்தின் ஆய்வுத் தலைவரும், பீடாதிபதியுமான பேராசிரியர் சிவமதி சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆய்வு மாநாட்டில் பல்கலைக்கழக ஆய்வுத் தலைவரும், துணைவேந்தருமான பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, 2022 ஆய்வு மாநாட்டின் வழிப்படுத்துநர் கலாநிதி எஸ்.கௌதமன், ஆய்வு வெளியீடுகளின் மாநாட்டின் பிரதம ஆசிரியர் பொறியியலாளர் டி.எச்.டீ.ஏ.ஈ.ஜெயசிங்க, இணைச் செயலாளர் கலாநிதி டி.எச்.கே.நவரட்ண ஆகியோர் அரங்கை அலங்கரித்தனர்.

இந்த மாநாட்டின் முதன்மை உரையாளராக இலங்கை பசுமைக் கட்டுமானப் பேரவையின் தலைவரும், பேராதனைப் பல்கலைக்கழக குடிசார் பொறியியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் ரஞ்சித் திசாநாயக்கவும் கலந்துகொண்டு 'பசுமை சார் கண்டுபிடிப்புகளும், தொழில் முனைவுகளும்' என்ற தலைப்பில் முதன்மை உரையாற்றினர். ஆய்வு மாநாட்டுக்கென முன்வைக்கப்பட்ட 52 ஆய்வுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 37 ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், பல்கலைக்கழகப் பீடாதிபதிகள், பேரவை உறுப்பினர்கள், பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# யாழ். போதனா வைத்தியசாலை படுகொலையின் 35ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு







(யாழ். நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையினுள் அத்துமீறி நுழைந்த இந்திய இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்ட 68 பேரின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை (21) அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய அமைதிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அத்தாக்குதல் சம்பவத்தில் வைத்தியசாலையில் கடமையிலிருந்த மூன்று மருத்துவர்கள், இரண்டு தாதியர்கள், மேற்பார்வையாளர் உள்ளிட்ட 21 மருத்துவ சேவையாளர்கள் மற்றும் சிகிச்சை பெற்றுவந்த 47 நோயாளர்கள் என 68 பேர் படுகொலைசெய்யப்பட்டனர்.

# மாதகலில் 60 கிலோ கேரள கஞ்சா மீட்பு

(யாழ். நிருபர்)

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று (22) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் மாதகல் கடற்கரையோரமாக 60 கிலோ கேரள கஞ்சாவும் கஞ்சாவை கடத்தி வரப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் படகொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் படகு என்பன இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸாரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவிட்டபுரத்தில் பயணித்த வேனில் திடீர் தீ!

(யாழ். நிருபர்)



மாவிட்டபுரத்தில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் பயணித்துக் கொண்டிருந்த வேன் திடீரென தீப்பற்றி எரிந்து முற்றாகச் சேதமடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் சாரதி மட்டும் பயணித்தபோது இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துக்கு மின் ஒழுக்கு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்ற போதும் சரியான காரணம் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் கூறினர்.

சம்பவத்தையடுத்து காங்கேசன்துறை கடற்படை முகாமிலிருந்து தீயணைப்பு வாகனம் கொண்டு வரப்பட்டு தீயணைத்த போதும் வேன் முற்றாக சேதமடைந்து விட்டது என்று தெரிவிக்கப்பட்டது.



# தீபாவளிப் பண்டிகை ஏன் கொண்டாடப்படுகிறது உண்மையான புராண வரலாறு என்ன?

ஒவ்வொரு வருடமும் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுவதற்கு பல புராணக் கதைகள் உள்ளன. தீபாவளி என்பது குழந்தைகள் அனைவரும் மிகவும் விருப்பமாகக் கொண்டாடக்கூடிய பண்டிகை யாகும். இன்றைய நாளில் அனைவரும் புத்தாடை உடுத்தி பட்டாசு வெடித்து சந்தோஷமாக கொண்டாடுவார்கள். இன்னும் சொல்லப் போனால் வீட்டில் உற்றார், உறவினர்கள் அனைவரும் ஒன்றுகூடி இந்த நன்னாளை மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடுவார்கள். தீபாவளிப் பண்டிகை தமிழ் மாத கணக்கீட்டின் படி பெரும்பாலான வருடங்களில் ஐப்பசி மாதம் அமாவாசை நாளில் தான் கொண்டாடப்படும்.

ஒருசில வருடங்களில் அமாவாசைக்கு முந்தைய தினம் கொண்டாடப்படும். ஆங்கில நாள்காட்டியின்படி ஒக்டோபர் 17 முதல் நவம்பர் 15ஆம் திகதிக்குள் தீபாவளிப் பண்டிகை ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகிறது. உலகின் பல நாடுகளிலும் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. இந்துக்கள் மட்டுமல்லாமல், சமணர்கள் மற்றும் சீக்கியர்கள் போன்றவர்களும் இந்தப் பண்டிகையை கொண்டாடுகிறார்கள். அதே சமயம், இந்தியாவில் தீபாவளிப் பண்டிகை ராமனோடு தொடர்புடையதெனக் கூறப்படுகிறது.

ராமன் தனது 14 வருட வனவாசத்தை முடித்துக் கொண்டு லட்சுமணன் மற்றும் சீதையுடன் அயோத்திக்கு திரும்பிய தினத்தைத்தான் அந்த நாட்டு மக்கள் விளக்கேற்றி கொண்டாடியதாகவும் அதுவே தீபாவளி நாள் எனவும் புராண வரலாறு கூறுகிறது.

மற்றொரு கதையில் பெரும் அட்டகாசம் செய்த நரகாசுரனை கிருஷ்ணர் வதம் செய்தபோது, தான் இறந்த தினத்தை மக்கள் அனைவரும் கொண்டாட வேண்டுமென அசுரன் கேட்டுக்கொண்டதால் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஆனால், பண்டித அயோத்திதாசர் தீபாவளிப் பண்டிகை பௌத்த பண்டிகை, அதனை பிராமணர்கள் திருடிக்கொண்டார்கள் என்கின்றார். இது தொடர்பாக அவர் எழுதிய ஒரு கட்டுரையில் தீபாவளிப் பண்டிகையை ஒரு பௌத்த பண்டிகை என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பண்டிகையின் உண்மை காரணத்தை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் தான் புதிதாக கற்பித்துக்கொண்ட கதையைதான் நரகாசுரன் கதை என சீனி வெங்கடசாமி கூறுகின்றார்.

இருந்தாலும் இவையெல்லாம் தீபாவளிக்கு பின்னணி குறித்த கதைகளை தவிர, அவை கொண்டாடப்பட்டது குறித்த ஆவணங்கள் எதுவும் கிடையாது. பின்னணியில் பார்க்கும்போது தமிழில் தீபாவளி குறித்த பதிவுகள் மிகக் குறைவாகவே உள்ளன. தமிழ் வரலாற்றில் மற்றும் இலக்கியங்களில் 19ஆம் நூற்றாண்டு வரை தீபாவளி என்ற சொல் எதுவும் கிடையாது. 1842ஆம் ஆண்டு இலங்கையில் வெளியிடப்பட்ட மணி பாய் தமிழ் என்ற தமிழ் அகராதியில் இந்தச் சொல் உள்ளது. அதற்குப் புராண விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, அந்தத் தருணத்தில் இந்த விழா அறிமுகமாகி இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

தீபாவளி என்ற வார்த்தைக்கு ஓர் அர்த்தம் உள்ளது. அதாவது தீபம் என்றால் விளக்கு, ஆவளி என்றால் வரிசை என்று அர்த்தம். அதாவது விளக்குகளை வரிசையாக ஏற்றி ஒளியினால் கடவுளை வழிபடும் அந்த புண்ணிய நாளைதான் தீபாவளி எனக் கூறுகிறோம். எந்தவொரு புராண வரலாறும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் வருடந் தோறும் தீபாவளிப் பண்டிகை மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுகிறது.

அன்றைய நாளில் அனைவரும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதை புனித நீராடல் எனக் கூறுகிறோம். பல பண்டிகைகள் வருடம் முழுவதும் வந்தாலும் தீபாவளி என்ற பண்டிகைக்கு தனிச்சிறப்பு உள்ளது. இந்த நாளில் ஏழை மற்றும் பணக்காரர் என்ற பாகுபாடு எதுவும் இல்லாமல் அனைவரும் புத்தாடை அணிந்து வீட்டில் தீபம் ஏற்றி தீபாவளிப் பண்டிகையை மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறார்கள்.

## நஞ்சு கொண்ட ஆட்சியிலே நமக்கென்ன தீபாவளி!

இந்தத் தீபாவளி இலங்கையிலே இனிக்கவில்லை!
பொருட்களுக்கும், புடவைக்கும், உடைகளுக்கும் விலை அதிகம்!
உழவனுக்கும் உரமில்லை, அதனால் வயல் விளையவில்லை!
உழைப்பவனும் ஊரினிலே உணவின்றி ஏங்குகிறான்!

ஊழல் செய்தவர்கள் யோக்கியன்போல் நடிக்கிறார்கள்!
ஊதுகுழல் பேர்வழிகள் உதவாக்கதை சொல்கிறார்கள்!
பஞ்சம் பசி பட்டினியாய் பாமரமக்கள் தவிக்கிறார்கள்!
வஞ்சகம் கொண்ட ஆட்சியில் வதைக்கதைகள் தொடர்கிறது!

கஞ்சல் தனத்தாலே காசு இல்லை பொருட்கள் வாங்க!
கொஞ்சம் பலகாரமும் செய்ய கோதுமை மா விலை அதிகம்!
பிஞ்சுக் குழந்தைகளுக்கும் பால் அருந்த முடியவில்லை!
நஞ்சு கொண்ட ஆட்சியிலே நமக்கென்ன தீபாவளி!

சாமான் விலை குறைந்தென்று சடுதியான செய்தி வரும்!
கடைத்தெருவில் போய்பார்த்தால் இல்லை என்று சொல்வார்கள்!
மடத்தனமாய் கதை கூறி மக்களையே பயம் முறுத்தும்போது!
கிடைத்திடுமா மகிழ்ச்சி வாழ்வு கேடு கெட்ட நம்ம நாட்டில்!

**அம்பிளாந்துறையூர் அரியம்**







# தீமையை அழித்து நன்மை பிறந்த நாள்



# தீபாவளி

தமிழர் கலாசாரம் என்பது பண்டிகைகள் நிறைந்த கலாசாரம். ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒவ்வொரு கதை வழங்கப்படுகிறது. தீபாவளிக்கும் நிறையக் கதைகள் உள்ளன. தீபாவளியை தீ ஒளி என முன்னோர் குறிப்பிட்டனர். தீமை அகன்று நன்மை பிறக்கும் நன்னாள் என்றனர். ஒளி என்பது வெற்றியின் அடையாளம். இருள் என்பது தோல்வியின் பொருள்.

தீபாவளிப் பண்டிகை தீமையின் வடிவான அசுரர்களை கடவுளின் அவதாரம் அழித்ததால் உருவானது என்கின்றன இந்துப் புராணங்கள். நம்மில் பெரும்பாலானோருக்குத் தெரியும் நரகாசுரன் கதை. நரகாசுரனின் உண்மைப் பெயர் பவுமன். திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியைத் துளைத்து அசுரர்களை அழிக்கச் சென்றபோது, அவரின் ஸ்பரிசத்தால் பூமாதேவிக்குப் பிறந்தவன் நரகாசுரன். அசுரவதத்தின்போது பிறந்தவன் என்பதால் அசுரசுபாவம் இவனுக்கு இயல்பாக அமைந்துவிட்டது. நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால் நரக அசுரன் எனப்பட்டான். அப்பெயரே நரகாசுரன் என்றானது.

இவன் தேவர்களுக்கும் மக்களுக்கும் பல்வேறு துன்பங்களைக் கொடுத்து வந்தான். இதையறிந்த மகாவிஷ்ணு அவனைக் கொல்ல நினைத்தார். ஆனால், அவன் பூமித் தாய்க்குப் பிறந்தவன். அவன் தன் தாயைத் தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றிருந்தான். எனவே, மகாவிஷ்ணு ஒரு தந்திரம் செய்தார். நரகாசுரனுடன் போரிட்டார். அவன் மகாவிஷ்ணு மீது அம்பு எய்தான். இந்த அம்பு பட்டு அவர் மயக்கமடைவது போல் கீழே விழுந்தார். இதைப் பார்த்த சத்யபாமா கோபம் கொண்டு நரகாசுரனைப் போருக்கு அழைத்தார். சத்யபாமா பூமியின் அவதாரம் என்றுணராமல் அவரோடு நரகாசுரன் போர் செய்தான். அன்னையின் அம்புக்கு பலியாகி சரிந்தான். அப்போதுதான் அவனுக்கு சத்யபாமா தனது தாய் என்று தெரிந்தது.

அவரிடம் “அம்மா, நான் மறைந்த இன்றைய தினம் மக்கள் மனதில் நிற்க வேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும் மக்களும் இந்த நாளை இனிப்பு வழங்கி, ஒளிமயமாகக் கொண்டாட வேண்டும்” என்று வேண்டினான். மகாவிஷ்ணுவும் சத்யபாமாவும் அவனுக்கு வரம் கொடுத்தார்கள். இதையொட்டி நரகாசுரன் மறைந்து மகிழ்ச்சி பொங்கிய நாள் தீபாவளிப் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. இதை கிருஷ்ண லீலை என்கிறது புராணம்.

வால்மீகி இராமாயணத்தில் இராமன் கொடியவனான இராவணனை அழித்துவிட்டு தனது வனவாசத்தை முடித்துக் கொண்டு மனைவி சீதையுடனும் சகோதரன் இலட்சுமணனுடனும் அயோத்திக்குத் திரும்பிய நாளை மக்கள் விளக்கேற்றி வரவேற்றனர். அதன் தொடர்ச்சியாக தீபாவளி பிறந்தது என்று சொல்லப்படுகிறது.

பொதுவாக தீபாவளி ஐப்பசி மாதங்களில் வரும். ஆனால், ஒரு சில வருடங்களில் இந்த மாதத்தில் மாற்றம் நடப்பதுண்டு. ஐப்பசி இல்லையென்றால் புரட்டாசி. இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. வாத்ஸ்யாயனர் எழுதிய நூல் ‘யட்ஷ ராத்திரி’ என்று தீபாவளிப் பண்டிகையைக் குறிப்பிடுகிறது. இது கார்த்திகை மாதம் அமாவாசை தினத்தன்று இரவில் கொண்டாடப்படுகிறது. இதனை ‘சுகராத்திரி’ என்று மக்கள் குறிப்பிடுகிறார்கள். விஷ்ணு புராணம் தீபாவளியன்று அதிகாலையில் நீராடி, மகாலட்சுமி பூஜையை அனுஷ்டித்து, தீபங்களை ஏற்றி வீடு நிறைய வைத்தால் லட்சுமி கடாட்சம் கைவரக் கிடைக்கும் என்கிறது.

இன்னொரு கதையும் உண்டு. ஸ்கந்த புராணத்தின்படி, சக்தியின் 21 நாள் கேதாரகௌரி விரதம் முடிந்தது இந்த தினத்தில்தான். விரதம் முடிவடைந்த பின்னர் சிவன், சக்தியை தன்னில் ஒரு பாதியாக ஏற்று அர்த்தநாரீஸ்வரர் உருவமெடுத்தார். இறைவன் ஜோதிவடிவாக நம்முள் இருக்கிறான். இந்த ஜோதி வடிவான இறைவனை வழிபடுவதற்கான சிறப்பு நாளே தீபாவளியாகும். தீப வழிபாடு தீபாவளி என நாம் கொள்ளலாம். மேலும், ஆணில் பெண் சரிபாதியாக இணையும் நன்னாளை நினைவுபடுத்துவதாக தீபாவளி அமைந்ததாகக் கூறுகிறது ஸ்கந்தபுராணம்.

புராணங்கள் இப்படிச் சொல்ல, தீபாவளிப் பண்டிகை எப்போதிருந்து கடைப்பிடிக்கப்பட்டது, ஏன் கொண்டாடப்படுகிறது என்பது பற்றி வேறு சில விளக்கங்களும் சொல்லப்படுகின்றன.

கி.பி.1100ஆம் ஆண்டிலேயே தீபாவளி கொண்டாடும் பழக்கம் இந்தியாவில் இருந்திருப்பதாக சில வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. கி.பி. 1117இல் வாழ்ந்த சாளுக்கிய திரும்புவன மன்னன் ஆண்டு தோறும் சாத்யாயர் எனும் அறிஞருக்கு தீபாவளிப் பரிசு வழங்கியதாக கன்னடத்தில் எழுதப்பட்ட கல்வெட்டொன்று கூறுகின்றது. கி.பி.1250இல் எழுதப்பட்ட ‘லீலாவதி’ எனும் மராத்தி நூலில் எண்ணெய் தேய்த்து நீராடுவதைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

பொதுவாக ஐப்பசி மாதம் பனி நிறைந்த மாதம். இல்லம் தோறும் குளிர் அதிகமாக அண்டும் காலம். இருள் கூடும் காலம் என்றும் இதைக் கூறலாம். அந்தக் காலகட்டத்தில் ஒளியைப் பெருக்கி உஷ்ணத்தை வீடுகளில் உருவாக்க இந்தப் பண்டிகையை மக்கள் கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கலாம் என்பது கரிசல் இலக்கிய எழுத்தாளர் கி.ராஜநாராயணன் கருத்து.

**எல்லோரும் கொண்டாடிய தீபாவளி**

தீபாவளிப் பண்டிகையை இந்தியர்கள் மற்றும் இந்துக்களைத் தவிர பிற நாட்டவரும் பிற மதத்தவரும் கூடக் கொண்டாடும் வழக்கம் இருந்துள்ளது.

பழங்கால இந்திய மன்னர்கள் இந்துக்களாக இருந்தாலும் முகலாயர்களாக இருந்தாலும் தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் மக்களுக்கு பல சலுகைகளையும் பரிசுப் பொருட்களையும் அளிப்பதை வழக்கமாக வைத்திருந்தனர். அரசனின் தர்பாருக்குள் மக்கள் அனுமதிக்கப்பட்டு அடிப்படைத் தேவைகளுக்கு அடித்தளம் போட்டுத் தரும் நாளாக பண்டிகைகள் திகழ்ந்துள்ளன. முகாலய மன்னர்களில் சிலர் தீபாவளி போன்ற இந்துக்களின் பண்டிகைகளை ஆதரித்தாகவும், பசியாக வந்தவர்களுக்கு விருந்து அளித்ததாகவும் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

பண்டைய காலத்தில் ரோம், எகிப்து, பாபிலோன், கிரேக்கம், பாரசீகம் எனப்பல உலக நாடுகளுடன் தமிழ் மன்னர்களுக்கு வர்த்தகத் தொடர்புகள் இருந்துள்ளன. இந்தியாவிலிருந்து வாசனைத் திரவியங்கள், மூலிகைகள், யானைத் தந்தங்கள் போன்றவற்றை எடுத்துச் சென்றதாக வரலாறு கூறுகிறது. அந்த வணிகத் தொடர்பின்போது இந்தியாவிலிருந்து சென்ற பல வணிகர்கள் இடம்பெயர்ந்த நாட்டில் தீபாவளிப் பண்டிகையை கொண்டாடியுள்ளனர். ஆகவே, பல தேசங்களுக்கும் பரவியுள்ளது தீபாவளி. சீக்கியர்களும் சமணர்களும் கூட இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காக கொண்டாடுகின்றனர். 1577இல் பொற்கோவில் கட்டுமானப் பணிகள் தொடங்கிய தினம் என சீக்கியர்கள் தீபாவளியைக் கொண்டாடகின்றனர். சமணர்கள், மகாவீரர் முக்தியடைந்த நாள் என தீபாவளியைக் கொண்டாடுகின்றனர். இப்போதும் கூட நேபாளம், மியன்மார், சிங்கப்பூர், மலேசியா, பிஜி, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளிலும் இந்தப் பண்டிகையை மக்கள் கொண்டாடுகிறார்கள்.



ART SILK SAREE
இது மிகவும் இலகுவான சேலையாகும். இந்த சேலையை நீங்கள் மிக எளிதாக அணிந்துகொள்ளலாம். இந்த சேலையின் நிறக்கலவை மிகவும் சிறப்பாக இருக்கும். பண்டிகைக்காலங்களில் அணிவதற்கு இது மிக சிறந்தது, வெள்ளை மற்றும் லெவண்டர் நிறத்தில் இந்த சாரிவகைகள் கிடைக்கின்றன.

SILK SAREE
அணிவதற்கு மிக எளிதானது. சிவப்பு மற்றும் மஞ்சள் நிறக்கலவை கொண்டது. இந்த சேலையை துவைப்பது உங்களுக்கு மிகவும் எளிதாக இருக்கும். இது பல வண்ணங்களில் கிடைக்கிறன. இது பல்வேறு டிசைன்களில் கிடைக்கிறன.

BANARASI SILK SAREE
வைபவங்களுக்கு அணிந்து செல்லக்கூடிய இந்த சேலையானது உங்களுக்கு ரிச் லுக் தரக் கூடியது. இது பனாரசி சிஃப்பான் துணி கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் லைட் வெயிட் புடவை. இவற்றில் கோல்டன் கலரில் டிசைன்கள் பிரிண்ட் செய்யப்பட்டுள்ளன.

CORA COTTON SAREE
பார்ப்பதற்கு சிம்பிளாகவும் அணிந்தால் ரிச்சான தோற்றத்தையும் அளிக்கவல்ல கோரா காட்டன் சேலை உறுத்தலற்ற எளிய நிறங்களிலும், பாரம்பரியமான டிசைன்களிலும் கிடைக்கின்றது, உடம்பை வதைக்காத தரம், வெயிலுக்கும் குளிருக்கும் தகுந்த இதம் என பல தனித்துவங்கள் உண்டு. இப்போது கோரா காட்டனில் டிரெண்டி லுக். பாட்டம், பள்ளு என பலவகை விற்பனைக்குண்டு.

ART SILK, SILK, BANARASI SILK மற்றும் CORA COTTON போன்ற பாரம்பரியமிக்க சேலை வகைகளை NOLIMIT காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

NOLIMIT®

# சுற்றுலாத்துறைக்கும் கிழக்கின் மேம்பாட்டுக்கும் உதவ சவூதி தயார்

## கல்முனை பிரதி முதல்வரிடம் தூதுவர் உறுதி



(கல்முனை - மாளிகைக்காடு நிருபர்கள்)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு சவூதி அரேபியத் தூதரகத்தினூடாக முடியுமான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள இருப்பதாக சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமௌத் என்.அல்கஹ்தானி ரஹ்மத் மன்சூர் பௌண்டேஷன் பிரதானியும், கல்முனை மாநகர பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரிடம் உறுதியளித்துள்ளார்.

கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூருக்கும் சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமௌத் என்.அல்கஹ்தானிக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை (20) கொழும்பிலுள்ள அந்நாட்டுத் தூதுவராலயத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியதாக பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கல்முனை அல்-ஹாமியா அரபுக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவுக்கு சவூதி அரேபியத் தூதுவரை பிரதம அதிதியாக கலந்துகொள்ளச் செய்வதற்கான அழைப்பை கல்லூரி சார்பில் விடுத்ததாகவும், இதன்போது கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வதற்கான விருப்பத்தை தூதுவர் வெளிப்படுத்தியதாகவும், இந்த அரபுக் கல்லூரியின் கல்வித்துறையை இன்னும் மேம்படுத்த வேண்டுமெனவும் இக்கல்லூரியிலிருந்து வெளியாகும் மாணவர்களுக்கு சவூதி அரேபியாவில் தகுந்த தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு உதவுவதாகவும் தூதுவர் இதன்போது உறுதியளித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள அறுகம்பை, பாசிக்குடா போன்ற முக்கிய சுற்றுலாத்தலங்களுக்கு விஜயம் செய்து, இலங்கையின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கு விருப்பம் கொண்டிருப்பதாகவும், இலங்கையின் அபிவிருத்திக்கும் கிழக்கு மாகாணத்தின் முன்னேற்றத்திற்கும் முடியுமான உதவிகளைச்செய்வதற்கும் தாம் தயாராகவிருப்பதாகவும் சவூதி அரேபியத் தூதுவர் உறுதியளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சுயதொழில் முயற்சியாளர்களுக்கான 03 நாள் செயலமர்வு சாய்ந்தமருதில்







(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்துமருது பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை கிளையின் அனுசரணையுடன் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான சவக்காரம், சலவைத்தூள் போன்ற உற்பத்திப் பொருட்களை உயர்ந்த தரத்தில் உற்பத்தி செய்வதற்கான 03 நாள் பயிற்சி செயலமர்வு சாய்ந்தமருது பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் சாய்ந்தமருது விதாதா வள நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை கிளை முகாமையாளர் செல்வம் பிரசாந்த், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஐ.எம்.நாசர், பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் யூ.எம். முஸம்மில் ஆகியோரும் வளவாளராக வெளிக்கள ஒருங்கிணைப்பாளர் ஏ.டபிள்யூ.எம்.ஜெமீலும் கலந்துகொண்டனர்.





திருகோணமலை பாலையூற்று சீரடி நாக சாயி ஆலயத்தில் சீரடி சாயி பாபாவின் வெண்பளிங்கு திருவுருவச்சிலை வைபவரீதியாக பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் பாபாவுக்கு பாலாபிஷேகம் செய்வதையும், திருமலை சீரடி நாக சாயி ஆலய ஆதீனகர்த்தா வரலக்ஷ்மி அம்மையார் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை வலயக்கல்வி அலுவலக தேசிய மீலாத் கொண்டாட்டம்





(நற்பிட்டிமுனை நிருபர் )

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மீலாதுன் நபி தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (20) வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் தலைமையில் வெகுசிறப்பாக இடம்பெற்றது.

பிரதம அதிதியாக பேராசிரியர் டாக்டர் பக்கீர் ஜஃபர் கலந்து கொண்டு உத்தம நபியின் உதய தினம் குறித்து எடுத்துரைத்தார்.

கல்விசார் உத்தியோகத்தர்கள், பாடசாலை மூவின அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட இன்னும் பலர் கலந்துகொண்டதோடு மாணவர் கலைநிகழ்ச்சிகளும் அரங்கேறின.

தலைமை உரையை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ச்துல் நஜீம் நிகழ்த்த வரவேற்புரையை இஸ்லாம் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நஸ்மியா சனூஸ் நிகழ்த்தினார்.

பிரதம அதிதிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவமும் வழங்கப்பட்டது. முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர். முகம்மட் பௌஸ் நன்றி பகிர்ந்தார்.

1000 பேருக்கு உணவுப்பார்சல்களும் இங்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



**உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்க பணமில்லை - நிதியமைச்சின் செயலாளர் சொல்லிருக்காரு எலுவா?**

**மறுகா என்னத்துக்கு சும்மா அந்த சபைகள வைச்சு பேய்காட்டிறயள்!**

**கண்ட நிண்டவனுக்கெல்லாம் 38 இராசாங்க அமைச்சர் பதவியையும், வாகனங்களையும் குடுத்து நாடகம் ஆடுற ஜனாதிபதிக்கு இது தெரியாதா?அதுக்குள இன்னும் அமைசர்மார கூட்டப்போகுதாம் அந்த கிழட்டு நரி.**

# தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மட்டக்களப்பில் போட்டி நிகழ்வுகள்





(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபையினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக பல்வேறு போட்டிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

இதற்கமைவாக மாணவர்களின் பொது அறிவுத்திறனை மேம்படுத்தும் நோக்கோடு பொது அறிவுப் போட்டி நிகழ்வின் ஆரம்ப வைபவம் கடந்த வியாழக்கிழமை (19) மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

# ‘அல்பா ஹெல்த் மெடிக்கல் சேவிஸ் பிறைவேட் லிமிட்டெட்’ இலங்கைக் கிளை உத்தியோகத்தர்கள் விருது வழங்கி கௌரவிப்பு





























(பி.எம்.எம்.ஏ.காதர்-ஏ.எல்.எம்.ஷினாஸ், றாஸிக் நபாயிஸ்)

சர்வதேச ரீதியில் மருத்துவத்துறையில் சாதனைகளைப் படைத்துவரும் அல்பா ஹெல்த் மெடிக்கல் சேவிஸ் பிறைவேட் லிமிட்டெட் இலங்கை மருதமுனை கிளை ஏற்பாடு செய்திருந்த உத்தியோகத்தர்களுக்கான "அல்பா விருது விழா 2022" (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை மருதூர் கனி ஞாபகார்த்த பொது நூலக மண்டபத்தில் அல்பா ஹெல்த் மெடிக்கல் சேவிஸ் பிறைவேட் லிமிட்டெட் இலங்கை கிளையின் முகாமையாளர் ஜஹாங்கீர் எம். இப்றாஹீம் தலைமையில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது

இந்த விருது விழாவில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.எம்.ஜுனைத் கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதிதிகளாக ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளர் எம்.எவ்.ஹிபத்துல் கரீம், ஓய்வுநிலை ஆசிரியர் ஏ.ஆர்.எம்.உவைஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர் மேலும் விசேட அதிதிகளாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி, ஓய்வுநிலை புள்ளிவிபர உத்தியோகத்தர் எம்.எம்.நக்பி, கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.எவ்.எம்.மர்சூக், கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய சேவைகள் பணிமனையின் உளவள வைத்திய சமூகப் பணியாளர் எம்.ஆர்.எம்.ஹமீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இகு மருதமுனை அல்பா ஹெல்த் மெடிக்கல் சேவிஸ் இலங்கை கிளையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களான றஸ்வி அஹ்மட், ஸபியுள்ளாஹ் ஸம்ஸத் நோபா, முஹம்மது இப்றாஹீம் பஹதா, முஹமட் சாதிக் அஸ்னத் சனா, முபாறக் பஸீலத், முஹம்மட் நஸீம் முஹம்மட் அஸாம், முகம்மட் அம்ஜத் அம்றிஸ் ஸுஹா, முஹம்மட் புகாரி ஜன்னத்துல் பரீரா, முஹம்மட் சுபைர் முஹம்மட் பாரிஹ் ஆகியோர் சிறந்த சேவைக்கான விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வை ஊடகவியலளரும்,அறிப்பாளருமான ஏ.எல்.எம்.ஷினாஸ் தொகுத்து வழங்கினார்.




# பாடசாலை மாணவிகளுக்காக Eva அறிமுகப்படுத்தும் Eva Dream



1987 ஆம் ஆண்டு முதல் இலங்கை சந்தையில் மாதவிடாய் சுகாதார அணையாடை தயாரிப்பில், முன்னணி வர்த்தக நாமமாகத் திகழும் Eva, தற்போது Eva Dream தயாரிப்பை அறிமுகம் செய்து, பாடசாலை மாணவிகள் மத்தியில் நிலவிய மாதவிடாய் கால சுகாதார பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வந்துள்ளது. இது நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பிரத்தியேகமாகக் கிடைக்கின்றது. Eva Dreamஎன்பது தற்காலத்தின் தேசிய தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில், தரமான மற்றும் கட்டுபடியான விலையில் கிடைக்கும் மாதவிடாய் சுகாதார அணையாடையாகும்.

ICL Brands Pvt Ltd இன் தயாரிப்பான Eva Dream மாதவிடாய் சுகாதார அணையாடையின் விலையானது கல்விக்கு ஒருபோதும் தடையாக இருக்கக்கூடாது என்ற தீர்மானத்துடன் அறிமுகம் செய்துவைக்கப்படுகின்றது. பெற்றோர்கள், சிவில் உரிமை ஆர்வலர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் மருத்துவ வல்லுநர்கள் ஆகியோரினால், சுகாதார அணையாடைகளின் விலையேற்றத்தினால் நாடளாவிய ரீதியில் பல பாடசாலை மாணவிகள் தமது மாதவிடாய் காலத்தில் பாடசாலைக்குச் சமுகமளிப்பதில்லை என்பதை தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த தயாரிப்பிற்கான மூலப்பொருட்களின் விலை உயர்வு காரணமாக, இந்த அத்தியாவசியப் பொருட்களின் விலை சமீப காலமாக சடுதியான அதிகரிப்பைக் கண்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியான பொருளாதார சூழ்நிலை மற்றும் கல்வி முன்னேற்றத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் விளைவுகளை கருத்திற்கொண்டு, Eva Dream இந்த நிலைமையை முடிவுக்குக் கொண்டுவர முயல்கிறது.

# விந்தியா பெரேராவுக்கு ஆண்டின் சிறந்த இளம் பெண் தொழில்முயற்சியாளருக்கான SABE விருது



இலங்கையின் முன்னணி மாணிக்கக்கல் அரிதல் மற்றும் பட்டை தீட்டுதல் நிறுவனமான Lustre Designs Corporationஇன் ஸ்தாபகர் திருமதி விந்தியா பெரேரா, பங்களாதேஷ், டாக்கா நகர் Pan Pacific Sonargaonஇல் அண்மையில் நடைபெற்ற தெற்காசியாவின் சிறந்த தொழில்முயற்சியாளர் 2022 (SABE) விருது விழாவில் பெண்கள் தலைமைத்துவப் பிரிவின் கீழ் ஆண்டின் சிறந்த இளம் பெண் தொழில்முயற்சியாளர் விருதை வென்றுள்ளார்.

மேலும், இந்த விருது விழாவில் Lustre Designs Corporation இன் தாய்நிறுவனமான பிரிலியன்ட் கட் நிறுவனம் அரியப்பட்ட மாணிக்கக்கற்களை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்தமைக்காக, இயற்கை வளங்கள் பிரிவின் ஏற்றுமதி முகாமைத்துவப் பிரிவின் கீழ் சிறந்த நிறுவனத்துக்கான விருதை தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் வென்றுள்ளது. SABE விருது விழாவில் தெற்காசிய நாடுகளின் தொழில்முயற்சித் துறையைச் சேர்ந்த பல முன்னணி நிறுவனங்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டன. அதன்போது, புத்தாக்கம், தொழில்முயற்சி திறன் மற்றும் முயற்சி ஆகிய விடயங்களில் திறமையினை வெளிப்படுத்திய வெற்றியாளர்கள் சர்வதேச நடுவர் குழாமொன்றினால் தெரிவு செய்யப்பட்டனர்.

"இந்த வெற்றி எமக்கு பெரும் மதிப்பும் அபிமானமுமாகும். அத்தோடு எமது வெற்றிப் பயணத்தின் தனித்துவமான மைல்கல் ஆகவும் இதனைக் குறிப்பிட முடியும்" என திருமதி விந்தியா பெரேரா தெரிவித்தார்.

# SLT-MOBITEL தேசிய வியாபார தொலைபேசிக் கோவையினால் மேம்படுத்தப்பட்ட eDirectory மற்றும் இணையத்தளம் வெளியீடு




தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் வழங்குநரான SLT-MOBITELஇன் முழு உரிமையாண்மையின்கீழ் இயங்கும், SLT டிஜிட்டல் சேர்விசஸ் (Pvt) லிமிடெட் (SLT-DIGITAL), பிந்திய மெருகேற்றம் செய்யப்பட்ட தேசிய வியாபார கோவையான eDirectory மற்றும் இணையத்தளத்தை அண்மையில் அறிமுகம் செய்திருந்தது.

மேம்படுத்தப்பட்ட eDirectory மற்றும் இணையத்தளத்தினூடாக வாடிக்கையாளர்களுக்கு மற்றும் விற்பனையாளர்களுக்கு, இலங்கையின் அதிகளவு மெருகேற்றம் செய்யப்பட்ட வியாபார தொலைபேசி விவரக் கோவை ஆதாரமென அதிகளவு பெறுமதி சேர்ப்பு வழங்கப்படுகின்றது. புதிய வெளியீட்டினூடாக 'Power of True Local Search' என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேம்படுத்திய www.rainbowpages.lk ஒன்லைன் கட்டமைப்பினூடாக, தினசரி 10,000 ஒன்லைன் பார்வையாளர்கள் கவரப்படுவதுடன், இலங்கையின் அதிகளவு செம்மையாக்கம் செய்யப்பட்ட தேடல் தளமாக (optimised search engine) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நுண், சிறு மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களின் பிரசன்னத்தை மேம்படுத்தும் வகையில், மேம்படுத்தப்பட்ட தேசிய வியாபார தொலைபேசி விவரக்கோவையினால், உறுதிசெய்யப்பட்ட தொடர்பாடல் தகவல்கள் வழங்கப்படுவதுடன், இந்த நிறுவனங்களுக்கு பெருமளவு தோற்றப்பாட்டையும் இலகுவான வாடிக்கையாளர் அணுகலையும் வழங்குகின்றது. Business to Business (B2B) அடங்கலான விற்பனையாளர்களுக்கு Search Engine Optimization (SEO) மற்றும் Search Engine Marketing (SEM) போன்றவற்றை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் காணப்படுவதால், விற்பனை அதிகரித்துக்கொள்வது மற்றும் அதிகளவு வாடிக்கையாளர்களை சென்றடையக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

# சுதேசி கொஹோம்ப நிறுவனத்தால் கந்தானை மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள்



முன்னணி தனிநபர் மூலிகை பராமரிப்பு தயாரிப்பு உற்பத்தியாளரான சுதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் பிஎல்சி நிறுவனம், கந்தானை, கந்தேவத்தை கிராம அலுவலர் பிரிவு மற்றும் கந்தானை, நாகொட மொரவத்தை கிராம அலுவலர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உதவி அவசியப்படும் குடும்பங்களுக்காக சுதேசி கொஹோம்ப பிரஜா சத்காரய எனும் திட்டத்தின் கீழ் இந்த நன்கொடைகள் வழங்கப்பட்டன. இது சுதேசி நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் சமூகப் பொறுப்புத் திட்ட தொடரின் மற்றுமொரு செயற்பாடாகும். முழுமையான இலங்கைக்குச் சொந்தமான ஒரு நிறுவனம் எனும் வகையில், இந்த கடினமான காலத்தில் எமது சொந்த ஊரிலுள்ள நுகர்வோருக்கு ஆதரவளித்து அவர்களைப் பேணுவதை ஒரு சமூகப் பொறுப்பாகக் கருதுகிறோம் என சுதேசி நிறுவனத்தின் தலைவி திருமதி அமாரி விஜேவர்தன மற்றும் சுதேசியின் பிரதித் தலைவியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான திருமதி சூலோதர சமரசிங்க ஆகியோர் தெரிவித்தனர்.

# இலங்கை சாரணர் சங்கத்துடன் இணைந்து சிறந்த கை தூய்மை சுகாதாரத்தை பரிந்துரைக்கும் லைஃப்போய்





யுனிலீவர் ஸ்ரீலங்காவின் முதன்மையான சுகாதார சவர்க்கார வர்த்தக நாமமான லைஃப்போய் (Lifebuoy), இலங்கை சாரணர் சங்கத்துடன் இணைந்து, கல்கிஸை புனித தோமஸ் கல்லூரியில் 13ஆவது முறையாக இடம்பெறும் 2022 தேசிய கியூபொரி (Cuboree) நிகழ்வை முன்னெடுத்திருந்தது.

இந்நிகழ்வில் சிறுவர்களிடையே கை கழுவுவதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தும் வகையில், உலகளாவிய கை கழுவுதல் தினத்தை நினைவுகூர்ந்தது. சமூகங்களுக்கிடையே நீண்டகாலமாக சிறந்த சுகாதார நடத்தைகளை பேணுவதற்கான தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக இந்நிகழ்வு இடம்பெற்றது

இந்நிகழ்வில் 12,000இற்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு ஒழுங்கற்ற கை தூய்மை தொடர்பான சுகாதார ரீதியான அபாயங்கள் குறித்து தெளிவூட்டல், அவர்களின் நேரடி பங்குபற்றல் மற்றும் தகவல் வழங்கல் செயற்பாடுகள் மூலம், கை கழுவுதல் தொடர்பான எளிய படிகள் சொல்லிக் கொடுக்கப்பட்டன.

சிறுவர்களுக்குள்ள இயல்பான தலைமைத்துவத் திறன்களை வெளிக்கொண்டுவரும் வகையில், மேலும் 5 பேருக்கு கை கழுவுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி அவர்கள் கற்றறிந்த விடயங்களை ஏனையோருக்கும் சென்றடைவது ஊக்குவிக்கப்பட்டது.

இந்த முக்கியமான செய்தியைப் பரப்புவதற்கான அவர்களின் பணியைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் வகையில், கை கழுவுதல் பிரதம விழிப்பூட்டல் அதிகாரிகளாக (Chief Education Officers - CEOs) அவர்களை பதிவுசெய்யுமாறு ஊக்குவிக்கப்பட்டனர்.

இதில், இலங்கை முழுவதுமிருந்து மொத்தமாக 9 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு, கை கழுவுதல் CEO அதிகாரிகளின் தலைமையில் தங்கள் பாடசாலை வளாகத்திற்குள் தனியான கை கழுவும் நிலையங்களை அமைப்பதற்காக தலா ரூ. 1,00,000 நிதியும் வழங்கப் பட்டது.

அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு போதியளவான லைஃப்போய் ஹேண்ட் வொஷ் உடன் சவர்க்காரம் மற்றும் கியூபொரி கையேடுகளையும் சிறுவர்களுக்கு லைஃப்போய் வழங்கியது.

# செலான் ஹரசார ஊடாக சிரேஷ்ட பிரஜைகளுக்கு அதிகளவு அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை



செலான் வங்கியின் சிரேஷ்ட பிரஜைகள் கணக்கான செலான் ஹரசார ஊடாக சிரேஷ்ட பிரஜைகளின் அத்தியாவசிய தேவைகளை இனங்கண்டு, அதற்குப் பொருத்தமான நிதித் தீர்வுகளுடன் பல சிறப்புரிமைகளும் வழங்கப்படுகின்றன. வழமையான மருத்துவ தேவைகளுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதுடன், அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கியினால் ஹரசார டெபிட் அட்டைதாரர்களுக்கு மருத்துவ சேவைகள் மற்றும் தினசரி தேவைகள் பலவற்றுக்கு பரந்தளவு விலைக்கழிவுகளை வழங்க முன்வந்துள்ளது.

செலான் ஹரசார டெபிட் அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் வெகுமதிகளில் சிரேஷ்ட பிரஜைகளின் முக்கிய தேவையாக அமைந்துள்ள மருத்துவ தேவைகள் தொடர்பில் பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதனைக் கவனத்திற்கொண்டு, ஆசிரி வைத்தியசாலையுடன் செலான் வங்கி கைகோர்த்து, OPDஆய்வுகூட சேவைகள், CT மற்றும் MRI ஸ்கான்கள், ECG, X-ray, மம்மோகிராம்கள் மற்றும் பல தெரிவுசெய்யப்பட்ட சேவைகளுக்கு செலான் டெபிட் அட்டையினூடாக கொடுப்பனவை மேற்கொள்ளும்போது 20%வரை விலைக்கழிவையும், ஆசிரி ஆய்வுகூடங்களில் 10% வரை விலைக்கழிவையும் பெற்றுக்கொள்ள முடியும். இந்தச் சலுகை, விஷன் கெயாரிலும் வழங்கப்படுவதுடன், ஹரசார அட்டைதாரர்களுக்கு செவிப்புலன் கருவிகளுக்கு 20% வரையிலும், மூக்குக் கண்ணாடி மற்றும் சன்கிளாஸ்களுக்கு 10% வரையிலும் விலைக்கழிவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், செலான் ஹரசார கணக்குதாரர்களுக்கு ஹோர்டன் பிளேஸ் மற்றும் கல்கிஸையில் அமைந்துள்ள சித்தாலேப சிகிச்சை நிலையங்களில் எந்தவிதமான சிகிச்சைகளையும், சித்தாலேப ஆயுர்வேத வைத்தியசாலையில் OPD மருந்துகள் மற்றும் சிகிச்சைகளைப் பெறும்போது 25%சேமிப்பைப் பெற முடியும்.

சித்தாலேப ஆயுர்வேத வைத்தியசாலையில் 2 இரவுகளுக்கு மேல் தங்கியிருந்து சிகிச்சைகளைப் பெறும்போது அறைக் கட்டணங்களுக்கும் இந்த விலைக்கழிவு வழங்கப்படுகின்றது.


# இலங்கையின் தேசிய நூலகத்திற்கு சிறுவர் நூல்களை நன்கொடையாக வழங்கியுள்ளது கொழும்பு துறைமுக நகரம்



இலங்கையில் சமூகங்களை மேம்படுத்துவதற்கும் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் தனது பல்வேறு முயற்சிகளின் தொடர்ச்சியாக கொழும்பு துறைமுக நகரத்தின் ஓரேயொரு முதலீட்டாளரும் பிரதான அபிவிருத்தியாளருமான CHEC Port City Colombo (CPCC) ஊக்கமளிக்கும் மற்றும் அறிவூட்டும் "City Rising from the Ocean" என்ற சிறுவர் கதை நூலின் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்ட 2,500 பிரதிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இலங்கையில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை முன்னெடுப்பதற்காக கடலிலிருந்து பெறப்பட்ட நிலத்தில் நிர்மாணிக்கப் படுகின்ற முதன்முதல் திட்டமிடல் நகரமான கொழும்பு துறைமுக நகரத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஈடுபாட்டைத் தோற்றுவிக்கும் வகையில் எதிர்காலத் தலைமுறைகளை ஊக்குவிக்கும் நோக்குடன், 2021ஆம் ஆண்டின் ஆங்கில மொழியில் முதலில் வெளியிடப்பட்ட நூலின் 2,000 பிரதிகள் அப்போது இலங்கையின் தேசிய நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. நூல் நன்கொடையுடன் சேர்த்து, இந்நிகழ்வைக் குறிக்கும் வகையில் தேசிய நூலகத்தில் சீன நூல் பகுதியை புனரமைப்புச் செய்யும் பணியையும் CPCC முன்னெடுத்துள்ளது.

# கொழும்பில் தனித்துவமான பணியிட வசதியை வழங்கும் Mireka Towe அங்குரார்ப்பணம்




கொழும்பின் தனித்துவமான எதிர்கால பணியிட வசதியை வழங்கும் வகையில் தலை நகரின் இதயப் பகுதியில் காணப்படும் Havelock Cityஇல் அமைக்கப்பட்டுள்ள Mireka Towe ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வைபவ ரீதியாகத் திறந்துவைக் கப்பட்டது.

50 மாடிகளுடன் 6,00,000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட தரம் 'ஏ' முன்னணி பணியிட வசதியை வழங்கும் Mireka Towe ஆனது, நகரத்தின் காட்சியைத் தரக்கூடிய தூண்களின் இடையூறு அற்றதாகக் காணப்படுவதுடன், கொழும்பின் வானுயர்ந்த கட்டடங்களில் வணிக கட்டட வளாகத்துக்கான மற்றுமொரு அடையாளமாக அமைகிறது.

# ரிட்ஸ்பரி ஜூனியர் தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் 2022இல் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர் நெவிந்து மற்றும் சனித்மா







சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் (CBL) நிறுவனத்தின் புகழ்பெற்ற சொக்லட் வர்த்தக நாமமான ரிட்ஸ்பரி அனுசரணையில் இடம்பெற்ற 33ஆவது ரிட்ஸ்பரி கனிஷ்ட தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் 2022 போட்டிகள் அண்மையில் வெற்றிகரமாக பூர்த்தியடைந்தன.

கொழும்பு SSC ஸ்கொஷ் அரங்கில் இறுதிப் போட்டி இடம்பெற்றதுடன், 9, 11, 13, 15, 17 மற்றும் 19 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் 300இற்கும் அதிகமான சிறுவர்கள் இந்தப் போட்டிகளில் பங்கேற்றனர்.

தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் போட்டிகளுக்கு ரிட்ஸ்பரி வழங்கும் பங்களிப்பு தொடர்பில் CBL ஃபுட்ஸ் இன்டர்நஷனல் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நிலுபுல் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில்,

"கடந்த காலங்களில், இலங்கையில் ஸ்கொஷ் விளையாட்டை தேசிய மட்டத்தில் மேம்படுத்தவேண்டியதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொண்டோம். உள்நாட்டு விளையாட்டு வீரர்கள் சர்வதேச மட்டத்தில் தெரிவாவதில் எமது முயற்சிகளும் பங்களிப்புச் செய்துள்ளன என்பதில் நாம் பெருமைகொள்வதுடன், இந்தச் சம்பியன்ஷிப் எதிர்காலத்திலும் தொடர்ந்து இடம்பெறும் என்பதையும் தெரிவிக்கின்றோம். இலங்கையில் விளையாட்டுகளுக்கு ஆதரவளிப்பதில் 16 வருட கால வரலாற்றை ரிட்ஸ்பரி கொண்டுள்ளது. எமது மெய்வல்லுநர் வீரர்களை தேசத்தின் பெருமையாக நாம் கருதுகின்றோம்" - என்றார்.

# ISO 9001:2015 தரச் சான்றிதழை வென்ற Halcyon, RR Environmental Services



தரச் சான்றிதழ்களை பெறுவதற்கான ஆலோசனைச் சேவைகளை வழங்கும் இலங்கையின் முன்னணி நிறுவனமான Halcyon தனியார் நிறுவனம் மற்றும் சூழலின் இருப்பு கருதி ஆலோசனை வழங்கும் RR Environmental Services நிறுவனம் ஆகியவை தமது பயணத்தில் புதிய மைல்கல்லை எட்டும் வகையில் அண்மையில் ISO 9001:2015 தரச் சான்றிதழை வென்றுள்ளன. இலங்கையின் தரச் சான்றிதழ் ஆலோசனை மற்றும் சூழல் ஆலோசனை சேவை இரண்டு நிறுவனங்களும் ISO தரச் சான்றிதழை வெல்லும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். 16 ஆண்டுகால வரலாற்றைக்கொண்டுள்ள Halcyon தனியார் நிறுவனம் இதுவரை பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள 500இற்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு ISO தரச் சான்றிதழை பெறுவதற்கு வெற்றிகரமாக வழிகாட்டியுள்ளது.

Halcyon நிறுவனத்துடன் இணைந்த RR Environmental Services நிறுவனம் நிலைத்தகு பேண் அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்டு முன்னோக்கிச் செல்லும் பல நிறுவனங்களுக்கு சூழலின் இருப்புடன் தொடர்புடையதாக ஆலோசனை வழங்கியுள்ளது.

# மைக்ரோ கார்ஸுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளும் HNB




இலங்கையின் மிகப்பெரிய நிதித் தீர்வுகள் வழங்குநரான HNB PLC, பல்வேறு சலுகைகள் உட்பட பிரத்தியேக தவணைப் பெக்கேஜ்களை வழங்க Micro Cars Limited உடன் கைகோர்த்துள்ளதோடு SAIC Almaz 7-சீட்டர் SUV மற்றும் Proton Saga Sedan காரை வாங்க விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களையும் வழங்குகின்றது.

இந்த கூட்டாண்மையானது தங்களது கனவு வாகனத்தை வாங்க விரும்புவோருக்கு மதிப்புமிக்க வாடிக்கையாளர் சேவையை வழங்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது, அதே நேரத்தில் இரு நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தவணை Packகளை வழங்குகிறது.

HNB AGM - PFS காஞ்சனா கருணாகம, HNB லீசிங் பிரிவின் தலைவர் சுசித் பெரேரா, Micro Cars தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி லோரன்ஸ் பெரேரா, Micro Cars குழுமத்தின் பணிப்பாளர் அசேல லிஹினிகடுவ, Micro Cars விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் ரவிந்து டி சில்வா மற்றும் வாடிக்கையாளர் உறவுகள் மேம்பாடுகள் தலைவர் ஜேக்கப் நிஷாந்தன் ஆகியோர் களனியிலுள்ள Micro Cars தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் இரு நிறுவனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

# BestWeb.lk 2022 விருதுகள் நிகழ்வில் சிறப்பு விருதை வென்றுள்ளது சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ் பிஎல்சி நிறுவனம்




இலங்கையின் முதல் அபிவிருத்தி நிதி நிறுவனமான சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ் (SDF) நிறுவனம், LK Domain பதிவகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட BestWeb.lk 2022 விருதுகள் நிகழ்வில் வங்கிச்சேவை மற்றும் நிதித் துறை பிரிவில் சிறப்பு விருதை வென்றுள்ளது. 12ஆவது முறையாக இடம்பெற்ற BestWeb.lk விருது வழங்கும் நிகழ்வில் புத்தாக்கமான இணையத்தளங்களைக்கொண்ட இலங்கையின் முன்னணி வர்த்தகநாமங்கள் மற்றும் நிறுவனங்கள் இடம்பெற்றன. குறிப்பிடத்தக்க வகையில், சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ் நிறுவனத்தின் இணையத்தளம், நாட்டின் பல முன்னணி வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு எதிராக போட்டியிட வேண்டிய ஒரு நிலைமை காணப்பட்டாலும் கூட, இந்நிறுவனத்தால் இப்பிரிவில் இந்த அங்கீகாரத்தைச் சம்பாதிக்க முடிந்துள்ளது.



# அபார வெற்றியுடன் சுப்பர் 12 சுற்றை ஆரம்பித்த இலங்கை

(ஏ. அகீல் சிஹாப்)

நடப்பு ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரின் சுப்பர் 12 சுற்றின் முதல் ஆட்டத்தில் அயர்லாந்து அணியை எதிர்கொண்ட இலங்கை அணி, 30 பந்துகள் மீதமிருக்க 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகு வெற்றிபெற்று தற்போது வரையான புள்ளிப்பட்டியலில் இரண்டாமிடத்தில் உள்ளது.

சுப்பர் 12 சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமான நிலையில், குழு 1இல் இடம்பெற்றுள்ள இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் நேற்று ஹொபார்ட்டில் அயர்லாந்து அணியை எதிர்கொண்டது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

129 என்ற இலகு வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு ஆடிய இலங்கை அணி, 15 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 133 ஓட்டங்களைக் குவித்து 9 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. போட்டியின் ஆட்டநாயகனாக 43 பந்துகளில் 68 ஓட்டங்களைக் குவித்த குசல் மெண்டிஸ் தெரிவானார்.

குறித்த போட்டியில் இலங்கை அணி 30 பந்துகள் மீதமிருக்கும் நிலையில் வெற்றிபெற்றதால் சிறந்த நெட் ரன்ரேட் பெறுமானத்தையும் பெற்றுள்ளது.

அதனடிப்படையில் குழு 1 புள்ளிப்பட்டியலில் ஒவ்வொரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டிகளில் ஆடிய நிலையில், இலங்கை அணி 2 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் காணப்படுகிறது. முதலிடத்தில் ஆஸி. அணியை இலகுவாக வீழ்த்திய நியூசிலாந்து அணி காணப்படுகிறது.

இலங்கை அணி சுப்பர் 12 சுற்றில் தங்களது அடுத்த ஆட்டத்தில் நாளை இலங்கை நேரப்படி பிற்பகல் 4.30 மணிக்கு அவுஸ்திரேலிய அணியை அவர்களது சொந்த மண்ணில் (அவுஸ்திரேலியா - பேர்த்) சந்திக்கிறது.

Champion
Germ Fighting Real Soap

எங்கள் சிங்கங்களை வாழ்திட
நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்
QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்
Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog
எதிர்காலம் இன்றே.

# ஊக்கமருந்தில் சிக்கிய பிரபல டென்னிஸ் வீராங்கனை



ருமேனியா நாட்டைச் சேர்ந்த 31 வயதான பிரபல டென்னிஸ் வீராங்கனை சிமோனா ஹாலெப் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தியிருப்பது பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கு நடத்தும் ஊக்கமருந்து பரிசோதனையில் சிமோனா தோல்வியடைந்தையடுத்து, அவரை உடனடியாக இடைநீக்கம் செய்து சர்வதேச டென்னிஸ் சங்கம் உத்தரவிட்டுள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின்போது தனது மாதிரிகளை சிமோனா பரிசோதனைக்கு கொடுத்திருந்தார்.

பரிசோதனையில் இவர் ரொக்ஸ்அடுஸ்டர் என்ற மருந்தை உட்கொண்டதும், இந்த மருந்து உடலில் சிவப்பு இரத்த அணுக்கள் அதிகம் சுரக்க துண்டுதல் செய்யும் என்பது மருத்துவ அறிக்கையில் தெரியவந்துள்ளது. பொதுவாக இந்த மருந்தானது சிறுநீரக பாதிப்பு கொண்டவர்கள் சிகிச்சைக்காக பயன்படுத்துவார்கள்.

இந்நிலையில், தன் மீதான இந்த புகார் அதிர்ச்சியளிப்பதாக சிமோனா கூறியுள்ளார். "என் வாழ்நாளிலேயே மிகுந்த அதிர்ச்சிக்குரிய தினம் இது. நான் எந்த ஊக்கமருந்தையும் பயன்படுத்தவில்லை. இதை நிரூபிக்கும் வரை போராடுவேன். உண்மை விரைவில் வெளியே வரும்'' - என்று வீராங்கனை சிமோனா கூறியுள்ளார்.

# 2022 எல்.பி.எல். தொடருக்கு புதிய இலட்சினை அறிமுகம்

LPL T20
LANKA PREMIER LEAGUE 2022

மூன்றாவது லங்கா ப்ரீமியர் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் இவ்வருட இறுதியில் ஆரம்பமாகவுள்ள நிலையில், 2022 எல்.பி.எல். தொடருக்கான புதிய இலட்சினை இலங்கை கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்டது. இதனை இலங்கை கிரிக்கெட் அணியின் இரசிகர் ஒருவரே வடிவமைத்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கை கிரிக்கெட் சபை புதிய இலட்சினையினை வடிவமைப்பதற்கான போட்டித் தொடர் ஒன்றினை ஒழுங்கமைத்திருந்ததோடு, இந்தப் போட்டித் தொடரின் மூலமே இலங்கை கிரிக்கெட் அணியின் இரசிகர் வடிவமைத்த இலட்சினையானது தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. அதேநேரம், இந்த இலட்சினையை வடிவமைத்த கண்டி நகரைச் சேர்ந்த 24 வயது நிரம்பிய மியூலிக்கா வீரமந்திரிக்கு 1000 அமெரிக்க டொலர்கள் பணப்பரிசும் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமையகத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டது.

சிங்கத்தை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டிருக்கும் புதிய இலட்சினையானது போட்டித்தொடர் நடத்தப்படுகின்ற நாடு வெளிப்படுத்தும் தைரியம், தீர்மானம் மற்றும் வலிமை போன்ற குணாதிசயங்களை வெளிப்படுத்துவதாகவும், இலட்சினையிலுள்ள துடுப்பாட்ட வீரரின் படம் இருபதுக்கு 20 கிரிக்கெட்டை சுற்றியிருக்கும் உற்சாகத்தினையும், சக்தி மற்றும் வலுவினை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருக்கின்றது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



# இறுதிப்பந்தில் த்ரில் வெற்றியுடன் பாகிஸ்தானை பழிதீர்த்த இந்தியா

நடப்பு இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியுடன் நேற்று மெல்பேர்னில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி இறுதிப்பந்தில் த்ரில் வெற்றிபெற்று பாகிஸ்தானை பழிதீர்த்தது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பத்தில் அடுத்தடுத்து இரு விக்கெட்டுகளை இழந்தாலும் இறுதியில் 8 விக்கெட் இழப்புக்கு 159 ஓட்டங்களைச் சேர்த்தது. 160 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலெடுத்தாடிய இந்திய அணி ஒரு கட்டத்தில் 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

எனினும், விராட் கோஹ்லி - ஹார்டிக் பாண்டியா ஆகியோரின் 113 ஓட்ட இணைப் பாட்டம் இந்திய அணிக்கு பலமாக அமைந்தது. இறுதிப்பந்தில் ஒரு ஓட்டம் தேவைப்பட்ட நிலையில், இந்திய அணி 4 விக்கெட்டுகளினால் த்ரில் வெற்றிபெற்றது. இந்திய அணியின் வெற்றிக்குக் காரணமாகத் திகழ்ந்த கோஹ்லி (82 ஓட்டங்கள்) ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

கடந்த வருடம் நடைபெற்ற இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் பாக். அணி வெற்றிபெற்ற நிலையில், இந்த வருடம் இந்திய அணி பழிதீர்த்தது.

# ஸஹிரியன் ப்ரீமியர் லீக் சீசன்-02 கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்றுடன் நிறைவு





(நூருல் ஹுதா, அப்ராஸ், அஸ்ரப் கான்)

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் அமைப்பான ஸஹிரியன் பழைய மாணவர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் மெற்ரோபொலிட்டன் ஸஹிரியன் ப்ரீமியர் லீக் சீசன்-02 கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மிகவும் கோலாகலமாக ஆரம்பமாகியது.

ஸாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து 29 அணிகள் பங்குகொள்ளும் 07 ஓவர்கள்கொண்ட குறித்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆரம்ப நிகழ்வுகள் கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்றது. இவ்வாரம்ப நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், பிரதான அனுசரணை வழங்கும் மெற்ரோபொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் கலந்துகொண்டார்.

மேலும் கௌரவ அதிதியாக கல்முனை கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான என்.எம். மலிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன் ஆகியோரும் விசேட அதிதியாக பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்.எஸ்.முஹம்மத், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், அனுசரணையாளர்கள் உட்பட ஏற்பாட்டுக் குழுவினர் கலந்துகொண்டனர். இன்று



திங்கட்கிழமை இறுதிப்போட்டியுடன் மெற்ரோபொலிட்டன் ஸஹிரியன் ப்ரீமியர் லீக் சீசன்-02 நிறைவடையவுள்ளது.

# பீபா உலகக்கிண்ணத்தின் ரசிகர்களுக்கான நடைமுறை அறிவிப்பு

## பெண் ரசிகர்கள் இஸ்லாமியர்களின் முக்காடு அணிவது கட்டாயமில்லை



பீபா உதைபந்து உலகக்கிண்ணத் தொடரின் ரசிகர் பாஸ், போட்டி டிக்கெட் உள்ளவர்கள் மட்டுமே நாட்டிற்குள் நுழைய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு டிக்கெட் வைத்திருப்பவரும் மூன்று பேரை அழைக்கலாம். ஆனால், அவர்கள் நுழைவுக் கட்டணமாக 500 ரியால் செலுத்த வேண்டும்.

பெண் ரசிகர்கள், இஸ்லாமியர்கள் அணியும் முக்காடு அணிவது கட்டாயமில்லை. ஆனால், அவர்கள் தோள்பட்டைமுதல் முழங்கால்வரை மூடியவாறு பொது இடங்களில் அடக்கமாக உடை அணிய வேண்டும். உத்தியோகபூர்வ கட்டடங்களில் இந்த விதி பயன்படுத்தப்படுகிறது, ஆனால், வெளிநாட்டினர் கூடும் இடங்களில் அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது.

கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் கட்டாய மில்லை, ஆனால், கட்டாருக்கு விமானத்தில் ஏறும் முன் ஆறு வயதுக்கு மேற்பட்டவர்கள் 48 மணிநேரத்திற்கும் குறைவான பி.சி.ஆர். சோதனை அல்லது 24 மணிநேரத்திற்குள் விரைவான அன்ரிஜென் சோதனையை மேற்கொள்ள வேண்டும். பெரியவர்கள் எஹ்திராஸ் பயன்பாட்டைப் பதிவிறக்கம் செய்து, தேவைப்படும்போது காட்ட வேண்டும்.

தடுப்பூசி இல்லாத பார்வையாளர்கள் வந்த பிறகு 10 நாட்களுக்கு முகமூடியை அணிய வேண்டும். கொவிட்-19இற்கு நேர்மறை சோதனை செய்யும் எவரும் ஐந்து நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும். சுகாதார வசதிகளில் முகமூடிகள் கட்டாயம் மற்றும் மைதானங்களில் பரிந்துரைக்கப்படுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7